விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 038 வள்ளுவர் ஆண்டு 2057 தை 12 திங்கட்கிழமை (26.01.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## கிவுல் ஓயா திட்டத்துக்கு எதிராக களமிறங்கும் தமிழ்க் கட்சிகள்

### மாபெரும் ஆர்ப்பாட்டத்துக்கும் ஏற்பாடு

(கொழும்பு)

அரசாங்கத்தினால் வவுனியா வடக்கில் மேற்கொள்ளப்படவுள்ள கிவுல் ஓயா திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ்க் கட்சிகளினால் எதிர்வரும் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

தமிழர் பகுதிகளை ஆக்கிரமித்து கிவுல் ஓயா திட்டமானது அரசாங்கத்தின் மில்லியன் கணக்கான நிதி ஒதுக்கீட்டோடு மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்நிலையில் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து குறித்த திட்டத்திற்கு எதிர்ப்பு 15ஆம் பக்கம் பார்க்க

## கிவுல் ஓயா திட்டம்

## தமிழ்க் கட்சிகளின் குற்றச்சாட்டை அடியோடு நிராகரித்தார் சந்திரசேகர்



(யாழ்ப்பாணம்)

கிவுல் ஓயாத் திட்டமானது தமிழ் மக்களின் இனப் பரம்பலை பாதிக்கும் வகையில் தமிழர் பகுதியில் நில அபகரிப்பை மையமாகக் கொண்டது என்ற குற்றச்சாட்டை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் அடியோடு மறுத்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்துள்ள அவர், 15ஆம் பக்கம் பார்க்க

## சிறை அதிகாரிகளுக்கு அதிரடி இடமாற்றம்

### நீதி அமைச்சர் ஹர்ஷன

(கொழும்பு)

சிறைச்சாலை அதிகாரிகளை இடமாற்றம் செய்வதற்கான பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட்டு வருவதாக 15ஆம் பக்கம் பார்க்க


## ரூ.133.94 மில்லியன் பெறுமதியான 'குஷ்' மீட்பு

மூன்று பேர் கைது 03ஆம் பக்கம் பார்க்க

வலம்புரி நாளிதழ் நடத்தும்
பொது அறிவுப் போட்டி - 2026
உள்ளே...

### எல்லை நிர்ணயம் தொடர்பில்

# மீண்டும் குழுவை நியமிப்பது மாகாண தேர்தலுக்கு ஆபத்து



### எச்சரிக்கிறார் சமன்ஸ்ரீ ரத்நாயக்க

(கொழும்பு)

எல்லை நிர்ணயம் தொடர்பில் ஆராய்வதற்கு மீண்டும் ஒரு குழுவை நியமித்தால் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது சாத்தியமற்றதாக அமையும் என எல்லை நிர்ணயக் குழுவின் செயலாளரும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் நாயகமுமான சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்க வைத்தியர்கள் மீண்டும் பணிப்புறக்கணிப்பு

### இன்று முதல் தொடர்கிறது

(கொழும்பு)

சுகாதார அமைச்சு மற்றும் அரச மருத்துவ அதிகாரிகளுக்கு இடையே உடன்பாடு எட்டப்படாத நிலையில் மீண்டும் இன்று திங்கட்கிழமை காலை 8 மணி முதல் சகல அரச வைத்தியசாலைகளிலும் பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்க அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

இதன் பிரகாரம் நேற்று 15ஆம் பக்கம் பார்க்க

### குழுத் தலைவர் பதவி

## சிறீதரனை நீக்க தமிழரசு முடிவாம்

### சுமந்திரன் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுவின் ஆலோசனையை பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் ஏற்க மறுத்தமையால், அவரை பாராளுமன்றக் 02ஆம் பக்கம் பார்க்க

## புதிய அரசியலமைப்பு எவ்வித ஏற்பாடும் இல்லை



### அஜித் பெரேரா எம்.பி ஆதங்கம்

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை இரத்துச் செய்வதற்கும் புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கும் அரசாங்கம் எவ்வித ஆரம்பகட்ட நடவடிக்கைகளையும் முன்னெடுக்க 02ஆம் பக்கம் பார்க்க

## பூநாறி மரத்தடியில் மோ.சைக்கிள் விபத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பூநாறி மரத்தடியில் நேற்றிரவு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் படுகாய 15ஆம் பக்கம் பார்க்க

### இந்திய மீனவர்களை


## விடுவிக்கக்கோரி பாம்பனில் சாலை மறியல் போராட்டம்



16ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2025 நிதி முகாமைத்துவத்தில் கிளி. மாவட்டம் சாதனை

(கிளிநொச்சி)

2025 ஆம் ஆண்டில் கிளிநொச்சி மாவட்ட செயலகம் பிரதேச செயலகங்களின் நிதி முகாமைத்துவத்தில் 98% அடைவு மட்டத்தினை அடைந்து உயர் பெறுமதியை எட்டியுள்ளது.

இது விடயத்தில் சிறப்பாகப் பணியாற்றிய உத்தியோகத்தர்களுக்கு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் முரளிதரன் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளதுடன் அவர்களைக் கௌரவித்து சான்றிதழ்களையும் வழங்கியுள்ளார்.

2026 ஆம் ஆண்டுக்கான நிதிசார் கலந்துரையாடலின் போது இக் கௌரவிப்பு இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்கள், பிரதம கணக்காளர், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர். (ந-7)

## மீண்டும்...

மாகாணசபைத் தேர்தல் குறித்து வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்ட அவர் மேலும் தெரிவித்தாவது,

தேர்தல் காலத்தில் நாட்டில் இனவாதம், மதவாதம் ஆகியவற்றை முன்னிலைப்படுத்திய பிரசாரங்கள் மற்றும் தேர்தல் சட்டத்துக்கு முரணான செயற்பாடுகள் இடம் பெறுவதற்கு விருப்பு வாக்கு முறைமை பிரதான காரணியாகக் காணப்படுகிறது.

தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக அரசியல்வாதிகளில் ஒருசிலர் தேர்தல் சட்டத்துக்கு முரணாகச் செயற்படுகிறார்கள். ஒருசிலர் இனவாதம், மதவாதம் ஆகியவற்றை முன்னிலைப்படுத்தி செயற்படுகிறார்கள். வடக்கு,கிழக்கு, தெற்கு என சகல மாகாணங்களிலும் இவ்வாறான நிலையே காணப்படுகிறது.

இலங்கையில் தேர்தல் முறைமை சிக்கலுக்குரியதாகவே உள்ளது. தேர்தல் முறைமை தொடர்பில் கடந்த காலங்களில் நியமிக்கப்பட்ட பாராளுமன்றக் குழுக்கள் மற்றும் தெரிவுக் குழுக்களுக்கு பல யோசனைகளையும், பரிந்துரைகளையும் முன்வைத்துள்ளோம். இதற்கமைய நாட்டில் கலப்புத் தேர்தல் முறைமை சிறந்ததாக அமையும் என்று பரிந்துரைகளை முன்வைத்துள்ளோம்.

அரசியலமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மாகாணசபைத் தேர்தலை பல்வேறு காரணிகளால் நடத்தாமல் இருப்பதும் எல்லை நிர்ணய விடயத்தை குறிப்பிட்டுக் கொண்டு மாகாணசபைத் தேர்தலை தொடர்ந்து பிற்போடுவதும் முறையற்றது.

2017ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட எல்லை நிர்ணய அறிக்கையை அரசியல்வாதிகள் முழுமையாக பரிசீலனை செய்யாமலே எதிர்த்தார்கள். அப்போதைய சூழலில் நாட்டில் ஸ்திரமற்ற அரசியல் நிலைமை காணப்பட்டமை இதற்கு ஒரு காரணியாகும்.

மாகாணசபைத் தேர்தலை எந்த தேர்தல் முறைமையில் நடத்துவது என்று ஆராய்ந்து விதப்புரைகள் மற்றும் யோசனைகளை முன்வைப்பதற்கு 12 பேரை உள்ளடக்கிய வகையில் குழு ஒன்றை நியமிக்கும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

எல்லை நிர்ணயம் தொடர்பில் ஆராய்வதற்கு மீண்டும் ஒரு குழுவை நியமித்தால் மாகாணசபைத் தேர்தலை நடத்துவது சாத்தியமற்றதாக அமையும். இந்தக் குழுவில் முன்னிலையாகி எல்லை நிர்ணயம் தொடர்பான விபரங்களை எடுத்துரைக்க நாங்கள் தயாராகவுள்ளோம்.

முறையான பரிசீலனைகள் ஏதும் இல்லாமலே எல்லை நிர்ணய அறிக்கை நிராகரிக்கப்பட்டது.ஆகவே இவ்விடயத்தில் உண்மைகளை வெளிப்படுத்த எமக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்றார். (ந-7)

## புதிய ...

வில்லை. புதிய யாப்பு உருவாக்கத்துக்கான எண்ணக்கரு பத்திரம் சமர்ப்பிக்கப்படும் என்று பிரதமர் குறிப்பிட்டது இன்றளவில் வெறும் அறிவிப்பாகவே காணப்படுகிறது. பத்தரமுல்ல கட்சி காரியாலயத்தில் இருந்துகொண்டு யாப்புருவாக்கப்பணிகளை முன்னெடுக்க முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி அஜித்பி பெரேரா தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்ட அவர் மேலும் தெரிவித்ததாவது,

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்காக நல்லாட்சி அரசாங்கம் முன்னெடுத்த நடவடிக்கைகளை விரைவுபடுத்தி ஆட்சிக்கு வந்தவுடன் புதிய யாப்பினை உருவாக்குவதாக தேசிய மக்கள் சக்தி நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கியது.

புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும், மாகாணசபை முறைமை பலப்படுத்தப்பட வேண்டும்.புதிய யாப்புருவாக்கம் தொடர்பில் எண்ணக்கரு பத்திரம் சமர்ப்பிக்கப்படும் என்று பிரதமர் பாராளுமன்றத்துக்கு அறிவித்தார். எவ்வித ஆரம்பகட்ட நடவடிக்கைகளும் எடுக்காத காரணத்தால் மூன்று மாதங்களுக்கு பின்னரும் அதே கேள்வியை கேட்டேன். அதற்கும் எண்ணக்கரு பத்திரம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் என்றே பதிலளித்தார்.

அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் வெளிப்படையான பேச்சுவார்த்தைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். நடைமுறையில் உள்ள அரசியலமைப்பில் பல குறைபாடுகள் காணப்படுகிறது. ஆகவே புதிய யாப்பினை உருவாக்கும் செயற்பாடுகளை அரசாங்கம் வெளிப்படையாக முன்னெடுக்க வேண்டும் என்றார். (ந-7)

## சிறீதரனை...

குழுத் தலைவர் பதவியிலிருந்து நீக்கக் கட்சி தீர்மானித்துள்ளதாகக் கட்சியின் பதில் பொதுச்செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

நேற்று (25) பிற்பகல் மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடியில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பாராளுமன்றக் குழுத் தலைவர் பதவியானது தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுவினாலேயே வழங்கப்பட்டது. தேர்தல் முடிந்த பின்னர் வவுனியாவில் நடைபெற்ற அரசியல் குழுக் கூட்டத்தில், அப்போதைய தலைவர் மாவை சேனாதிராஜாவும் கலந்துகொண்டிருந்தார். அந்தக் கூட்டத்திலேயே தேசியப் பட்டியல் ஆசனத்தை வைத்தியர் சத்தியலிங்கத்திற்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

அதிகாரம்: அதேபோன்று பாராளுமன்றக் கொறடா பதவியை வைத்தியர் சத்தியலிங்கத்திற்கும் பாராளுமன்ற நடவடிக்கைக் குழுவின் பிரதிநிதியாக இரா.சாணக்கியனையும் நியமிக்கத் தீர்மானித்தோம். பாராளுமன்றக் குழுவின் தலைவராக எஸ். சிறீதரனை நியமித்தோம். ஒரு குழு நியமித்த பதவியை மாற்றுவதற்கான அதிகாரம் அக்குழுவிற்கே உண்டு.

அரசியல் குழு அவர் மீது நம்பிக்கை வைத்து ஏகமனதாக இப்பதவியை வழங்கியது. ஆனால் அவர் அரசியலமைப்புச் சபை உறுப்பினர் பதவியிலிருந்து விலக வேண்டும் என அரசியல் குழு இரண்டு தடவைகள் ஆலோசனை வழங்கியிருந்தது. நேற்று திருகோணமலையில் நடைபெற்ற கூட்டத்திலும் சுமார் 4 மணித்தியாலங்கள் இது குறித்து வலியுறுத்தியும் அவர் செவிமடுக்கவில்லை.

கட்சியின் எந்த உயர் சபை அவருக்குப் பதவியை வழங்கியதோ, அந்தச் சபையின் ஆலோசனையை அவர் நிராகரித்ததால், அப்பதவியை அவரிடமிருந்து மீளப்பெறத் தீர்மானித்துள்ளோம் என்றார்.

எவ்வாறாயினும், இது குறித்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே. சிவஞானத்திடம் வினவியபோது, அவ்வாறு சிறீதரனைப் பதவியிலிருந்து நீக்குவது தொடர்பான எந்தவொரு இறுதித் தீர்மானமும் இதுவரை எடுக்கப்படவில்லை எனத் தெரிவித்தார். (ந-7)


கண்ணீர் அஞ்சலி

கிளி/ பளை மத்திய கல்லூரியின் ஆசிரியர்
அ.ஜெயந்தன் அவர்களின் அன்புத் தாயார்

அமரர் ஜெயராணி அம்பலவாணர்



தோற்றம் 1946.12.13 மறைவு 2026.01.24

அவர்கள் 24.01.2026 அன்று இறைபதம் அடைந்தமையையிட்டு அவர் தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-4887)

ஊழியர் நலன்புரிச் சங்கம்
கிளி/ பளை மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை)



கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியை
திருமதி ரஜி சுரேந்திரன்
அவர்களின் தந்தையார்

திரு. சங்கரப்பிள்ளை பேரின்பநாயகம்

அவர்கள் 25.01.2026 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-4886)

பிரிவுத் துயரில் பங்கு கொள்ளும்
யாழ்/ யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரிச் சமூகம்



கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியர்
திரு.தர்மராஜா செந்தில்குமரன்
அவர்களின் தாயார்

திருமதி தர்மராஜா மோகனாம்பாள்

அவர்கள் 25.01.2026 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-4886)

பிரிவுத் துயரில் பங்கு கொள்ளும்
யாழ்/ யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரிச் சமூகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டவிரோத மணல் அகழ்வு டிப்பர் சாரதி கைது

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற இரண்டு டிப்பர் வாகனங்களையும் அதன் சாரதிகளையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

விசேட அதிரடி படையினர் மேற்கொண்ட சோதனையின் போதே குறித்த சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக குறித்த பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த நபரது டிப்பர் வாகனமே பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதாக தெரிய வந்துள்ளது.

கைப்பற்றப்பட்ட டிப்பர் வாகனங்களில் ஒன்று உரிய அனுமதி பத்திரங்களுடன் பயணித்தமையால் டிப்பர் வாகனமும் அதன் சாரதியும் விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (8)

# ஏஐ உடன் உரையாட சிறுவர்களுக்கு தடை

## மெட்டா நிறுவனம் அறிவிப்பு

(கொழும்பு)

**இன்ஸ்டாகிராம் மற்றும் வாட்ஸ் அப் போன்ற தளங்களில் உள்ள செயற்கை நுண்ணறிவு (AI) கதாபாத்திரங்களைச் சிறுவர்கள் பயன்படுத்த மெட்டா நிறுவனம் தற்காலிக தடை விதித்துள்ளது.**

இத்தொழில்நுட்பத்தில் கூடுதல் பாதுகாப்பு வசதிகள் சேர்க்கப்படும் வரை இத்தடை தொடரும் என நிறுவனம் அறிவித்துள்ளது.

மெட்டா நிறுவனத்தின் அறிவிப்பின்படி, இன்ஸ்டாகிராம் மற்றும் வாட்ஸ்அப் தளங்களில் உருவாக்கப்பட்டுள்ள பிரத்தியேக செயற்கை நுண்ணறிவு கதாபாத்திரங்களைச் சிறுவர்கள் பயன்படுத்துவது வரும் வாரங்களில் நிறுத்தப்படும்.

மெட்டாவின் பொதுவான செயற்கை நுண்ணறிவு அசிஸ்டெண்ட் சேவையைச் சிறுவர்கள் தொடர்ந்து பயன்படுத்தலாம்.

இருப்பினும், மனிதர்களைப் போலவே உரையாடக்கூடிய பிரத்தியேக செயற்கை நுண்ணறிவு கதாபாத்திரங்களுடன் அவர்கள் இனி உரையாட முடியாது.

தங்கள் வயதை 18 இற்கு கீழ் எனப் பதிவு செய்துள்ளவர்கள் மட்டுமின்றி, தொழில்நுட்பத்தின் மூலம் சிறுவர்கள் எனச் சந்தேகிக்கப்படுபவர்களுக்கும் இச்சேவை துண்டிக்கப்படும்.

சமூக ஊடகங்கள் சிறுவர்களின் மனநலனைப் பாதிப்பதாக தெரிவித்து, மெட்டா, டிக்டாக் மற்றும் யூடியூப் நிறுவனங்கள் மீது அமெரிக்காவில் அடுத்த வாரம் வழக்கு விசாரணை தொடங்கவுள்ள நிலையில் மெட்டா நிறுவனம் இம்முடிவை எடுத்துள்ளது.

ஏற்கனவே கேரக்டர் ஏஐ நிறுவனத்தின் சாட்பாட்டுடன் உரையாடிய சிறுவன் ஒருவன் தவறான முடிவெடுக்க தூண்டப்பட்டதாகத் தொடரப்பட்ட வழக்கு அந்நிறுவனத்திற்கு நெருக்கடியைத் தந்தது.

இந்தநிலையில், இது போன்ற விபரீதங்களைத் தவிர்க்க மெட்டா நிறுவனம் இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)

## கிளிநொச்சியில் திருட்டுத்தனமாக நெல் அறுவடை



(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் திருட்டுத்தனமாக நெல் அறுவடை செய்யப்பட்டுள்ளதாக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி விசேட குற்றத் தடுப்பு பிரிவில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது சுமார் 39 இலட்சம் ரூபா பெறுமதியான 10 ஏக்கர் நெல் திருட்டுத்தனமாக அறுவடை செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வரும் பொலிஸார், குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும் நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். (8)

## 'குஷ்' போதைப் பொருளுடன் மூன்று பேர் கைது

(கொழும்பு)

பண்டாரநாயக்க சர்வதேச வானூர்தி நிலையத்தின் ஊடாக சுமார் 133.94 மில்லியன் ரூபாய் பெறுமதியான "குஷ்" ரக போதைப் பொருட்களைக் கடத்த முயன்ற மூன்று பயணிகள் நேற்று காலை சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வானூர்தி நிலைய சுங்க அதிகாரிகள் மற்றும் சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினர் இணைந்து முன்னெடுத்த சோதனையின் போது, வருகை முனையத்தில் எவ்வித அறிவித்தலும் இன்றி வெளியேற முயன்ற போதே குறித்த மூவரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 29, 32, 37 வயதுடையவர்கள் என தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்கள் மூவரும் நேற்று அதிகாலை 4 மணியளவில் ஓமானின் மஸ்கட் நகரில் இருந்து கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தை வந்தடைந்ததாக தெரியவந்துள்ளது. (8)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் சுப்பிரமுனிய கோட்டத்தால் வட்டு. இந்துக் கல்லூரியில் கல்வி கற்கும் 2026 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு எதிர்வரும் செவ்வாய் மற்றும் புதன் கிழமைகளில் காலை 8 மணி முதல் மதியம் 12.30 மணிவரை கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

குறித்த கருத்தரங்கு ரிஷி தொண்டு நாதன்சுவாமிகளின் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் கணித பாடத்துக்கு பிரபல ஆசிரியர் ம.அசுபதிராஜ் அவர்களினாலும் தமிழ் பாடத்துக்கு பிரபல ஆசிரியர் சி.தங்கரூபன் ஆகியோரும் வளவாளர்களாக கலந்து கொள்ள உள்ளனர். (8)

## துப்பாக்கியுடன் ஒருவர் கைது



(கொழும்பு)

அம்பலாங்கொடை - வதுகெதர பகுதியில் உள்ள வீடொன்றின் அறைக்குள் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த மைக்ரோ வகை கைத்துப்பாக்கி மற்றும் தோட்டாவுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் வதுகெதர பகுதியைச் சேர்ந்த 33 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இந்தச் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (8)

## இடைக்காடு மகாவித்தியாலய நூற்றாண்டு விழா

(கொழும்பு)

இடைக்காடு மகா வித்தியாய நூற்றாண்டு விழா நிகழ்வானது இன்று திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் கு.அகிலன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஆரம்பப் பிரிவு கட்டட நன்கொடையாளர் சிவகுமார் சியாமளா மற்றும் முகப்பு வளைவு நன்கொடையாளர் சிறிசத்தியானந்தம் அரியதவமலர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (8)

## சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு 166 மில்லியன் அமெரிக்க டொலர்

(கொழும்பு)

பெண் தொழில் முனைவோர்களால் முன்னெடுக்கப்படும் வணிக மற்றும் விவசாய துறையை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான நிதி அணுகலை விரிவுபடுத்துவதற்காக 166 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டுத் திட்டத்தை சர்வதேச நிதி நிறுவனம் அறிவித்துள்ளது.

சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்குத் தேவையான நிதி உதவிகளை எளிதாகக் கிடைக்கச் செய்வதே இந்த திட்டத்தின் முக்கிய நோக்கமாகும் என தெரிவிக்கப்படுகிறது. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# ரி-20 உலகக் கிண்ணத் தொடர்

# இந்தியாவில் விளையாட மறுத்த பங்களாதேஷ்

# மாற்று அணியை அறிவித்து ஐ.சி.சி அதிரடி!

**2026 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஐ.சி.சி ஆடவருக்கான ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் இருந்து பங்களாதேஷ் அணி நீக்கப்பட்டு, அந்த இடத்திற்கு ஸ்கொட்லாந்து அணி தெரிவு செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச கிரிக்கெட் பேரவை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.**

எதிர்வரும் பெப்ரவரி 7 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இந்தத் தொடரின் போட்டி அட்டவணைப்படி, இந்தியாவில் விளையாட பங்களாதேஷ் கிரிக்கெட் சபை மறுப்புத் தெரிவித்தது.

இந்தியாவில் தமது அணிக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறி, தமது போட்டிகளை இணை நாடான இலங்கைக்கு மாற்றுமாறு பங்களாதேஷ் கோரிக்கை விடுத்திருந்தது.

எனினும், பங்களாதேஷின் கோரிக்கையை அடுத்து, சர்வதேச கிரிக்கெட் பேரவை உள்வாரி மற்றும் வெளிவாரி பாதுகாப்பு நிபுணர்களைக் கொண்டு விரிவான ஆய்வுகளை மேற்கொண்டது.

அந்த ஆய்வுகளுக்கமைய, இந்தியாவில் பங்களாதேஷ் அணி வீரர்களுக்கோ, அதிகாரிகளுக்கோ அல்லது இரசிகர்களுக்கோ நம்பத் தகுந்த அல்லது உறுதிப்படுத்தக்கூடிய பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் எதுவும் இல்லை என சர்வதேச கிரிக்கெட் பேரவை முடிவு செய்துள்ளது.



இந்தநிலையில், கடந்த புதன் கிழமை நடைபெற்ற கூட்டத்திற்குப் பின்னர், போட்டியில் பங்கேற்பதை உறுதிப்படுத்த பங்களாதேஷிற்கு 24 மணிநேர காலக்கெடு வழங்கப்பட்டது.

எனினும், அந்த காலக்கெடுவுக்குள் பங்களாதேஷிடம் இருந்து எந்த உறுதிப்படுத்தலும் வராததால், சர்வதேச கிரிக்கெட் பேரவை இந்த இறுதி முடிவை எடுத்துள்ளது.

பங்களாதேஷ் வெளியேறியதையடுத்து, தகுதிச் சுற்றில் வாய்ப்பை இழந்திருந்த அணிகளின் தர வரிசையில் முன்னிலையில் இருந்த (14 ஆவது இடம்) ஸ்கொட்லாந்து அணி தற்போது உள்ளீர்க்கப்பட்டுள்ளது.

இதன்படி, குழு "C" பிரிவில் ஸ்கொட்லாந்து அணி, இங்கிலாந்து, இத்தாலி, நேபாளம் மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் ஆகிய அணிகளுடன் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

# ஐ.பி.எல் தொடருக்கு தயாராகும் டோனி

## சி.எஸ்.கே ரசிகர்கள் உற்சாகம்



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் முன்னாள் தலைவருமான எம்.எஸ் டோனி 2026 ஐ.பி.எல் தொடரில் களமிறங்க தயாராகி வருகிறார்.

சென்னை சூப்பர் கிங்ஸ் அணி டோனியை ரூபாய் 4 கோடிக்கு அணியில் தக்க வைத்துள்ளது. இதன்படி ஐ.பி.எல் 2026இல் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் தலைவராக ருதுராஜ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், மார்ச் இறுதியில் ஐ.பி.எல் தொடர் தொடங்கவுள்ள நிலையில், எம்.எஸ்.டோனி பயிற்சியைத் தொடங்கியுள்ளார்.

டோனி பயிற்சியில் ஈடுபட்டு வரும் காணொளியை இந்தியாவின் ஜார்க்கண்ட் மாநில கிரிக்கெட் பேரவை வெளியிட்டுள்ளது. இந்த காணொளி இணையத்தில் தற்போது வைரலாகியுள்ளது. (3)

# இலங்கையை வீழ்த்தி தொடரை சமப்படுத்தியது இங்கிலாந்து



இங்கிலாந்து அணி இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் ரி-20 தொடர்களில் விளையாடி வருகிறது. முதல் ஒருநாள் போட்டியில் இலங்கை அணி வெற்றி பெற்று தொடரில் 1-0 என முன்னிலை வகிக்கிறது.

இந்நிலையில், இரு அணிகளுக்கான 2 ஆவது ஒருநாள் போட்டி கொழும்பில் நடைபெற்றது. நாணய சுழற்சியில் வென்ற இலங்கை அணி துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 49.3 ஓவரில் 219 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. சரித் அசலங்கா 45 ஓட்டங்களும், தனஞ் செய டி சில்வா 40 ஓட்டங்களும் எடுத்தனர்.

இங்கிலாந்து சார்பில் அடில் ரஷித், ஜோ ரூட், ஜேமி ஓவர்டன் தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.

இதையடுத்து, 214 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து களமிறங்கியது. ஜோ ரூட் பொறுப்புடன் ஆடி அரை சதம் கடந்து 75 ஓட்டங்கள் எடுத்தார். ஹாரி புரூக் 42 ஓட்டங்களும், பென் டக்கெட் 39 ஓட்டங்களும் எடுத்தனர்.

இறுதியில், இங்கிலாந்து 46.2 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 223 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. அத்துடன், இரு அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடர் 1-1 என சமனிலை வகிக்கிறது.

இலங்கை அணி சார்பில் தனஞ்செய டி சில்வா, ஜெப்ரி வாண்டர்சே தலா 2 விக்கெட் வீழ்த்தினர். ஆட்ட நாயகன் விருது ஜோ ரூட்டுக்கு அளிக்கப்பட்டது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லப்பா சுவாமி குருபூசை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லூர் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்த குருபூசை நிகழ்வு, நல்லூரில் அமைந்துள்ள சுவாமிகளின் நினைவாலயத்தில் இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை 9 மணிக்கு திருமுறை நற்சிந்தனைப் பாடல்கள் இடம் பெறும்.

தொடர்ந்து, "புத்திர பாக்கியம்" எனும் தலைப்பில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீட பீடாதிபதி சர்வேஸ்வரன் குருக்கள் பத்மநாபன் உரையாற்றவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (8)

# தைப்பூச வழிபாடு

(யாழ்ப்பாணம்)

அருட்பெரும் ஜோதி இராமலிங்கப் பெருமானுடைய உலக அமைதிக்கான தைப்பூச திருநாள் நிகழ்வானது எதிர்வரும் பெப்ரவரி மாதம் 1 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 4 மணி முதல் 6 மணி வரை .சத்திய ஞானக்கோட்டம் மீசாலை, வடக்கு கொடிகாமம் என்னும் விலாசத்தில் அமைந்துள்ள ஞானசபையில் நடைபெறவுள்ளது. (3)



அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த பாடசாலைக்கு உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத்தின் தலைவர் ப.தர்மகுமாரனால் விளையாட்டு உபகரணம் வழங்கி வைக்கப்பட்டது.

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 150 | 300 | 350 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 160 | 160 |
| பச்சைமிளகாய் | 500 | 600 | 600 | 600 |
| தக்காளி | 600 | 550 | 500 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 200 | 150 |
| கோவா | 250 | 250 | 300 | 300 |
| கரட் | 400 | 430 | 300 | 500 |
| பூசணி | 100 | 140 | 120 | 150 |
| புடோல் | 250 | 200 | 300 | 300 |
| வாழைக்காய் | 200 | 200 | 150 | 250 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 160 | 160 | 200 | 180 |
| பாகற்காய் | 550 | 700 | 600 | 800 |
| வெண்டக்காய் | 300 | 400 | 400 | 400 |
| கருணைக் கிழங்கு | 300 | 250 | 300 | 300 |
| பயற்றங்காய் | 700 | 500 | 800 | 600 |
| லீக்ஸ் | 350 | 450 | 300 | 400 |
| பீற்றூட் | 500 | 400 | 500 | 500 |
| கறிமிளகாய் | 1000 | 900 | 700 | 800 |
| முருங்கைக்காய் | -- | -- | 2000 | -- |
| போஞ்சி | 600 | 500 | 500 | 500 |
| கத்தரிதம்புள்ள | 300 | 300 | 300 | 300 |
| கீரை – 1 பிடி | 100 | 40-140 | 250 | 120 |
| தேசிக்காய் | 300 | 200 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 160 | 150 | 100-150 |
| இராசவள்ளி | 600 | 400 | 400 | 500 |
| வெங்காயப்பூ | 600 | 400 | 600 | 600 |
| முள்ளங்கி | 100 | 160 | 200 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 150 | 80 |
| வல்லாரை | 60 | 50 | 100 | 80 |
| ஈரப்பலா | 150 | -- | 100 | 150 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3349

நாகேஸ்வரி




முகுந்தன்




சுகந்தி




ராசன்




விதுசன்




மரீனா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கண்டி கலஹா சிவபூமி மலையக ஆச்சிரமத்தின் 3ஆவது ஆண்டு நிறைவு விழா கடந்த 24 ஆம் திகதி சனிக்கிழமை ஆச்சிரம அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.



யாழ்ப்பாணம் மாநகரசபையின் 2025 ஆம் ஆண்டுக்கான பாதீட்டின் 4.2 மில்லியன் நிதி ஒதுக்கீட்டின் கீழ் சின்னக் கடை பொதுச்சந்தை புனரமைக்கப்பட்டு மாநகர முதல்வர் வி.மதிவதனி அவர்களினால் கடந்த 23 ஆம் திகதி உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

மிகவும் பழமை வாய்ந்த சின்னக்கடை பொதுச் சந்தை மாநகரசபையினால் நீண்ட காலத்தின் பின்னர் திருத்தம் செய்யப்பட்டு புதுப்பொலிவுடன் மக்கள் பயன்பாட்டிற்கு கையளிக்கப்பட்டுள்ளது.




ஜீவஊற்று அன்பின் கரம் நிறுவனம் மற்றும் மிசன் மெயில் நிறுவனம் இணைந்து நடத்திய தையல் பயிற்சி மற்றும் ஆரி வேலைக்குரிய பாடநெறி பயிற்சிகளை வெற்றிகரமாக நிறைவு செய்த முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களை சேர்ந்த 60 மாணவிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும், குறித்த நிறுவனத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கான அடையாள அட்டைகள் மற்றும் புதிய நிறுவன சீருடைகள் வழங்கும் நிகழ்வும் கிளிநொச்சி மணியங்குளத்தில் அமைந்துள்ள ஜீவஊற்று அன்பின் கரம் கிளை அலுவலகத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. (படம்- சதீஷ்)



முற்று முழுதாக இலங்கை கலைஞர்களின் பங்கேற்பில் தயாரிக்கப்பட்ட "கண்ணம்மா" திரைப்படத்தின் சிறப்புத் திரையிடல் யாழ். [illegible] திரையரங்கில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. [illegible]

# யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியை முன்னிட்டு வலம்புரி நாளிதழ் நடத்தும்

## பொது அறிவுப் போட்டி - 2026

**நியந்தனைகள்**

- ♦ வயதெல்லை வரையறுக்கப்படவில்லை.
- ♦ போட்டியில் பங்குபற்றுபவர்கள் வலம்புரியில் வெளிவருகின்ற பொது அறிவு வினாக்களுக்கு அந்தப் படிவத்திலேயே விடையளிக்க வேண்டும்.
- ♦ 2026 ஜனவரி 23, 24, 25, 26, 27 ஆகிய ஐந்து நாட்களில் ஒவ்வொரு நாளும் பத்துக் கேள்விகளாக, மொத்தம் 50 கேள்விகளுக்கு விடையளித்து அவற்றை ஒன்றாகச் சேர்த்து **வலம்புரி, இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு சாதாரண தபாலிலோ அன்றி நேரிலோ ஒப்படைக்க வேண்டும்.
- ♦ தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் பொது அறிவுப் போட்டி - 2026 எனக் குறிப்பிடவும்.

**முடிவு திகதி: 03.02.2026**

**பரிசு விபரம்**

- ❖ போட்டியில் 50 வினாக்களுக்கும் சரியான விடை அளித்தவர்கள் ஒன்றுக்கு மேற்பட்டவர்களாக இருக்கும் பட்சத்தில், குலுக்கல் முறையில் வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்.
- ❖ சரியான விடையெழுதியவர்களின் பெயர் விபரம் வலம்புரியில் வெளிவரும்.

- **முதல் பரிசு : 10, 000/=**
- **இரண்டாம் பரிசு : 7, 500/=**
- **மூன்றாம் பரிசு : 5, 000/=**
- **2000/= 10 ஆறுதல் பரிசுகள்**

---

**யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியை முன்னிட்டு வலம்புரி நாளிதழ் நடத்தும் பொதுஅறிவுப் போட்டி - 2026**

**பொது அறிவுப் போட்டி - 04**

31. தேசிய கீதத்தை இயற்றியவர் யார்?
...................................................

32.தேசிய கீதத்தை தமிழில் மொழிபெயர்த்தவர்?
...................................................

33. மகாகவி என அழைக்கப்பட்ட ஈழத்துக் கவிஞர்?
...................................................

34. தங்கத் தாத்தா என அழைக்கப்பட்ட புலவர்?
...................................................

35. வசனநடை கைவந்த வல்லாளர் எனப் போற்றப்பட்ட தமிழ் அறிஞர்?
...................................................

36. பர்மா என அழைக்கப்பட்ட நாடு இப்போது எவ்வாறு அழைக்கப்படுகிறது?
...................................................

37. ரஷ்ய அதிபரின் பெயர்?
...................................................

38. வட கொரியாவின் அதிபராக இருப்பவர் யார்?
...................................................

39.இசையமைப்பில் ஒஸ்கார் விருதைப் பெற்ற தமிழக இசையமைப்பாளர்?
...................................................

40.இந்தியாவின் உப ஜனாதிபதி யார்?
...................................................

போட்டியாளரின் முழுப்பெயர்: ...................................

விலாசம்: ...................................

பிறந்த திகதி: ...................................

தொலைபேசி இலக்கம்: ...................................

...................................

திகதி: ...................................  ஒப்பம்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது அம்புலன்ஸ்

## நால்வர் காயம்



(கொழும்பு)

ஏறாவூரிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த அம்புலன்ஸ் வண்டி ஒன்று நேற்று அதிகாலை ஹபரணை பகுதியில் விபத்துக் குள்ளானதில், நால்வர் பலத்த காயமடைந்துள்ளனர்.

தம்புள்ளை - ஹபரணை வீதியில் பயணித்துக்கொண்டிருந்த போது கட்டுப்பாட்டை இழந்து குறித்த அம்புலன்ஸ் விபத்துக்குள்ளாகியுள்ளது.

காயமடைந்த அனைவரும் உடனடியாக மீட்கப்பட்டு சிகிச்சைக்காக பொலனறுவை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இவர்களில் சிலரது நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (8)

# கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(சாவகச்சேரி)

யாழ் மாவட்டத்தை மையமாகக் கொண்டு விளிம்புநிலை மக்களுடைய வாக்குரிமை தொடர்பாக செயற்பட்டு வருகின்ற பேவ் இளைஞர் குழுவினரின் ஊடாக அண்மையில் சாவகச்சேரி சக்தியம்மன் பாடசாலைக்கு ஒரு தொகுதி சுத்திகரிப்பு உபகரணங்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மேற்படி பாடசாலையில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் வருடா வருடம் இடம்பெயர்ந்து தங்கி வருகின்ற நிலையிலேயே சுத்திகரிப்பு உபகரணங்களின் தேவைப்பாடு குறித்து பாடசாலை அதிபர் கோவிற் குடியிருப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்திடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக கிராம அபிவிருத்திச் சங்கம் பேவ் இளைஞர் செயற்பாட்டு குழுவினை அணுகி மேற்படி உதவித்திட்டத்தை வழங்கி வைத்துள்ளது.

மேற்படி நிகழ்வில் மாண வர்களை மகிழ்வூட்டும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-30)



உள்ளூராட்சி வார நிகழ்வின்போது, வலி வடக்கு பிரதேச சபையில் நடைபெற்ற கயிறு இழுத்தல் போட்டியில் பங்குபற்றி, 2ஆம் இடத்தை பெற்றுக்கொண்ட வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர்கள் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மானிப்பாய் பிரதேச சபையின் மாதாந்த அமர்வின் போது கௌரவிக்கப்பட்டனர். (படம்-கஜிந்தன்)


மணிவிழா வாழ்த்துக்கள்

திருமதி.
சொர்ணகலா சுபாஸ்கரன்
(ஆசிரியர், யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி)



சேவை விபரம்
- யா/வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம், வல்வெட்டித்துறை
  03.01.2000 - 30.06.2001
- கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
  01.07.2001 - 30.06.2003
- யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம்
  01.07.2003 - 10.01.2014
- யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
  13.01.2014 - 26.01.2026

ஒய்வு காலத்தில் சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

Best Wishes

(1984)

வாழ்த்துவோர்–
ஆசிரியர் நலன்புரிச்சங்கம்,
யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, வல்வெட்டித்துறை



31ம் நாள் நினைவலைகள்

அமரர்.
அ.பஞ்சலிங்கம்



தோற்றம் 08.01.1936
மறைவு 28.12.2025

ஆயிரம் லிங்கங்கள்
உலகில்தோன்றிடினும்
ஒரு பஞ்சலிங்கத்திற்கு
அது நிகராகுமா

நினைவுகளுடன்
நண்பர்குழாம்
வினோபா நூலகம்,
வினோபா நகர், கச்சாய்.

(C-4880)



சேவைநலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்

BEST WISHES

திருமதி.சுகந்தி முகுந்தன் (SLTS-I)
(B.Sc(Hons),PGDE,M.Ed)



முப்பத்தாறு ஆண்டுகள் ஆசிரியர் பணியில் இருபத்து நான்கு ஆண்டுகள் தீவக கல்வி வலயத்திலும் எமது கல்லூரியில் ஆறு ஆண்டுகள் விஞ்ஞான பாட ஆசிரியராகவும் உப அதிபராகவும் சிறந்த சேவையாற்றி கல்லூரியின் வளர்ச்சிக்குப் பல வழிகளிலும் ஊன்றுகோலாய் இருந்து 26.01.2026 இல் தனது 60 ஆவது அகவையில் கால் பதிக்கும் எமது ஆசிரியர் திருமதி. **சுகந்தி முகுந்தன்** அவர்களுக்கு எமது கல்லூரி சார்பாக இனிய பிறந்தநாள் நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதோடு அவர் தனது ஓய்வுக் காலத்தில் நீண்ட காலம் நலமாக வாழ வேண்டும் என இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம். வாழ்க பல்லாண்டு! வாழ்க நலமுடன்

சேவை விபரம்
1) யா/வட இந்து மகளிர் கல்லூரி - பருத்தித்துறை - 23.03.1990 - 05.01.1997
2) யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி - 06.01.1997 - 31.12.2001
3) யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம் - 01.01.2002 - 04.01.2007
4) யா/புனித அந்தோனியார் கல்லூரி (தற்காலிக இணைப்பு) - 05.01.2007 - 10.01.2008
5) யா/சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம் - 11.01.2008 - 12.07.2009
6) யா/வேலணை மத்திய கல்லூரி - 13.07.2009 - 08.01.2014
7) யா/கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் வித்தியாலயம் - 09.01.2014-07.04.2021
8) யா/ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி - 08.04.2021 - 26.01.2026

(1984)

வாழ்த்துவோர் : அந்தோனியார் குடும்பம், ஊர்காவற்றுறை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாரதம்





## இந்தியாவின் 77 ஆவது குடியரசு தினம் இன்று!

(டில்லி)


இந்தியா தனது 77 ஆவது குடியரசு தினத்தை இன்றைய தினம் கொண்டாடுகிறது.

தமது அரசியல் அமைப்பினை ஏற்றுக்கொண்டு காலனித்துவத்திலிருந்து விடுபட்டு, இந்தியா அதிகார பூர்வமாக குடியரசாக மாறிய நாள் இதுவாகும்.

இதனை முன்னிட்டு தலைநகர் டில்லியில் நடைபெறவுள்ள பிரமாண்டமான அணிவகுப்பில் இராணுவ யுத்த தாங்கிகள், வானூர்திகள் என்பன பங்குகொள்ளவுள்ளன.

இன்றைய நிகழ்வில் ஐரோப்பிய ஆணையகத்தின் தலைவர் உர்சுலா பான் டெர் லேயன் மற்றும் ஐரோப்பிய சபையின் தலைவர் அன்டோனியோ கோஸ்டா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் மதிப்பு மிக்க இந்த அரச நிகழ்வில் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் இவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். (3)



## கனடாவுக்கு 100

## கனடாவுடனான

## ட்ரம்ப் கடும்

**(வோஷிங்டன்)**

**சீனாவுடன் கனடா வர்த்தக ஒப்பந்தம் மே அந்த நாட்டிலிருந்து அமெரிக்காவுக்கு இற ப்படும் அனைத்துப் பொருட்கள் மீதும் 100 விதிக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி ெ பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

தனது "ட்ரூத் சோஷியல்" தளத்தில் பதிவிட்டுள்ள ட்ரம்ப், "கனடா சீனாவுடன் ஒப்பந்தம் செய்தால், உடனடியாக அமெரிக்காவுக்குள் வரும் அனைத்து கனேடியப் பொருட்கள் மற்றும் தயாரிப்புகள் மீது 100 சதவீதம் வரி விதிக்கப்படும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், சீனப் பொருட்கள் அமெரிக்காவுக்குள் நுழைவதற்கான ஒரு "இறங்குதுறை" ஆகக் கனடாவைப் பயன்படுத்த பிரதமர் கார்னி நினைத்தால், அவர் மிகப்பெரிய தவறு செய்கிறார் என்றும் அவர் சாடியுள்ளார்.

சமீபத்தில் சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெற்ற உலகப் பொருளாதார மன்றக் கூட்டத்தில் கனடா பிரதமர் மார்க் கார்னி ஆற்றிய உரை ட்ரம்ப்பை ஆத்திரமடையச் செய்துள்ளது.

கார்னி தனது உரையில் உலக வல்லரசுகளின் ஆதிக்கத்திற்கு எதிராகப் பேசியிருந்தார்.

முன்னதாக, சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்குடன் கார்னி மேற்கொண்ட சந்திப்பின் போது, மின்சார வாகனங்கள் உட்பட பல்வேறு துறைகளில் வர்த்தக ஒப்பந்தம்

## இந்தியா மீதான வரியை

### குறைக்க அமெரிக்கா திட்டம்

### நிதியமைச்சர் தெரிவிப்பு




(வோஷிங்டன்)

இந்தியா மீது விதிக்கப்பட்டுள்ள 25 சதவீத கூடுதல் வரி நீக்கப்பட வாய்ப்புள்ளதாக அமெரிக்க நிதி அமைச்சர் ஸ்காட் பெசன்ட் சூசகமாக தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவிடம் இருந்து இந்தியா மசகு எண்ணெய் வாங்கியதால் அதன் மீது நாங்கள் கூடுதலாக 25 சதவீத வரி விதித்தோம் எனவும் இது எங்களுக்கு வெற்றி எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தற்போது ரஷ்யாவிடம் இருந்து இந்தியா கச்சாய் எண்ணெய் இறக்குமதி செய்வது வெகுவாக குறைந்து விட்டது எனவும் இதனால் இந்தியா மீது விதிக்கப்பட்ட கூடுதல் வரியை நீக்க இருதரப்பு பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது எனவும் இதனால் இந்தியா மீதான கூடுதல் வரி நீக்கப்படலாம் என வெளிநாட்டு ஊடகமொன்றிற்கு அமெரிக்க நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவிடம் எண்ணெய் வாங்கும் நாடுகள் மீது 500 சதவீத வரி விதிப்பது தொடர்பான சட்டமூலம் மீது அமெரிக்க பாராளுமன்றத்தில் ஆலோசனை நடைபெறும் நிலையில், இந்தியா மீதான கூடுதல் வரி நீக்கப்படலாம் என அவர் மேலும் கூறியுள்ளார். (3)



## ட்ரம்பின் அடுத்த

## அமெரிக்க இராணுவத்தில் இ

## மிகவும் அபாயகரமான போ

(நியூயோர்க்)

எதிரிகளின் ரேடாரில் சிக்காத, 'மிகவும் அபாயகரமான' போர் விமானம் என்று கூறப்படும், 'எப்-47' விரைவில் அமெரிக்க இராணுவத்தில் இணைய உள்ளது.

அமெரிக்கா தன் இராணுவ பலத்தை மேம்படுத்த, பல்வேறு புதிய தொழில்நுட்பங்களுடன் கூடிய ஆயுதங்களை உருவாக்கி வருகிறது.

இதேபோன்று கடற்படை, விமானப்படைகளிலும் அதிநவீன கப்பல்கள், விமானங்களை தயாரித்து வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, எப் - 47 என்ற ரேடாரில் சிக்காத ஆறாம் தலைமுறை போர் விமானங்களை தயாரிக்கும் ஒப்பந்தத்தை, 'போயிங்' நிறுவனம் பெற்றது.

இதன் முதல் போர் விமானம், விரைவில் அமெரிக்க விமானப் படைக்கு கிடைக்க உள்ளதாக, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

இந்த விமானத்தின் வடிவமைப்பு, முதன்மை இறக்கைகள் மற்றும் காக்பிட் அருகே, 'கனார்ட்' எனப்படும் சிறிய இறக்கைகளுடன் கூடியதாக உள்ளது.

இவை கூர்மையான திருப்பங்கள், தாக்குதலின் போது விமானத்தின் சமநிலை, முன்-பின் சாய்வு கட்டுப்பாடு ஆகியவற்றுக்கு பயன்படுகின்றன.

இது, நீண்ட தூர பயணத்துக்கு ஏற்ற திறன் பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு



## ...0 சதவீத வரி விதிப்பேன்!

## ...வர்த்தக ஒப்பந்தத்திற்கு

## ...எச்சரிக்கை

...மற்கொண்டால்,
...றக்குமதி செய்ய
...0 சதவீதம் வரி
...டொனால்ட் ட்ரம்ப்



...எட்டப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் இதனை "நல்ல விடயம்" என வரவேற்ற ட்ரம்ப், தற்போது அதற்கு எதிராகக் கடும் நிலைப்பாட்டை எடுத்துள்ளார்.

கடந்த ஆண்டு முதலே கனடாவுடனான உறவில் ட்ரம்ப் ஒருவித முரண்பட்ட போக்கைக் கடைப்பிடித்து வருகிறார்.

கனடாவை அமெரிக்காவின் "51 ஆவது மாநிலம்" என்றும், மார்க் கார்னியை அதன் "ஆளுநர்" என்றும் கிண்டலாக அழைத்து வரும் ட்ரம்ப், ஒருகட்டத்தில் கனடாவையே முழுமையாகக் கையகப்படுத்தப் போவதாகவும் குறிப்பிட்டிருந்தார்.


கிரீன்லாந்தைக் கைப்பற்றும் ட்ரம்ப்பின் முயற்சி மற்றும் நேட்டோ தொடர்பான அவரது கருத்துக்கள் ஏற்கனவே கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் விரிசலை ஏற்படுத்தியுள்ளன.

இந்தநிலையில் "அமெரிக்காவால்தான் கனடா பிழைத்துக் கொண்டிருக்கிறது" என டாவோஸ் மாநாட்டிலேயே ட்ரம்ப் வெளிப்படையாகப் பேசியமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (3)

## இரண்டாகப் பிளவடையும்

## ஆபிரிக்கக் கண்டம்

### எச்சரிக்கும் விஞ்ஞானிகள்



ஆபிரிக்கக் கண்டம் மெதுவாக இரண்டு துண்டுகளாகப் பிரிந்து வருவதாகவும் இதனால் ஒரு புதிய சமுத்திரம் உருவாகும் என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

பூமியின் உட்பகுதியிலிருந்து எழும் வெப்பக் குழம்பு, நிலத்தின் மேலோட்டை வலுவிழக்கச் செய்து அதனை உடைப்பதாலேயே ஆபிரிக்காவின் புவியியல் வரைபடம் மெல்ல மெல்ல மாறி வருகிறதென ஆய்வாளர்கள் விளக்கியுள்ளனர்.

இந்த நிலவியல் மாற்றம் மிகவும் மெதுவாக நடந்தாலும், கண்டத்தகடுகள் நகர்வதால் இந்தப் பகுதிகளில் நிலநடுக்கங்கள் மற்றும் எரிமலைச் செயற்பாடுகள் அதிகரிக்கும் அபாயம் உள்ளதாக வர்ஜீனியா டெக் பல்கலைக்கழக புவியியலாளர் டி. சாரா ஸ்டாம்ப்ஸ் தெரிவித்துள்ளார்.

பூமியின் மேலோடு 15 முதல் 20 வ்ரையான டெக்டோனிக் தகடுகள் எனப்படும் புவித் தகடுகளால் ஆனது.

ஆபிரிக்காவில் உள்ள கிழக்கு ஆபிரிக்க பிளவு பகுதியில், "சோமாலிய தகடு" மற்றும் "நுபிய தகடு" ஆகிய இரண்டும் ஒன்றையொன்று விட்டு விலகிச் செல்கின்றன. இந்த தகடுகள் ஆண்டுக்கு சில மில்லி மீற்றர்கள் என்ற அளவிலேயே நகர்கின்றன.

எனவே, ஆபிரிக்கக் கண்டம் முழுமையாகப் பிரிந்து புதிய சமுத்திரம் உருவாக இன்னும் மில்லியன் கணக்கான ஆண்டுகள் ஆகும் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

எத்தியோப்பியாவின் அபார் பகுதியில் மூன்று தகடுகள் சந்திக்கும் இடம் தனித்துவமானதாகும்.

இங்கு நிலப்பரப்பு கடல் மட்டத்திற்குக் கீழே செல்வதால், காலப்போக்கில் கடல் நீர் உட்புகுந்து புதிய சமுத்திரம் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் பிளவு செயல்முறை சுமார் 25 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கிவிட்டது எனவும் இது செங்கடலில் இருந்து மொசாம்பிக் வரை சுமார் 2,174 மைல்கள் தூரம் நீண்டுள்ளது என்றும் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். (3)

## ...இலக்கு ...இணையவுள்ள ...ார் விமானம்!



ஒரு முறை எரிபொருள் நிரப்பினால் 1,800 கிலோ மீற்றர் சுற்று தூரத்தை தங்கு தடையின்றி அடையும். மணிக்கு 2,500 கிலோ மீற்றர் வேகத்தில் எப் - 47 பறக்கும் திறன் உடையது.

மேம்பட்ட தொலை தூர மற்றும் குறுகிய தூர ஏவுகணைகள், ட்ரோன்கள் எனப்படும் ஆளில்லா சிறிய விமானங்கள் ஆகியவை இதில் இணைக்க முடியும்.

இதில் இணைக்கப்பட உள்ள ட்ரோன்கள், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துடன் தாமாகவே முடிவெடுத்து செயற்படும் திறன் கொண்டவை.

இந்த விமானங்களின் தயாரிப்புக்கள் தொடங்கியுள்ள நிலையில், 2030 ஆம் ஆண்டுக்குள் விமானப் படையில் முழுதும் இணையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (3)

## அமெரிக்காவை உலுக்கும்

## கடும் பனிப்புயல்

### பல மாநிலங்களில் அவசரநிலை அறிவிப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் டெக்சாஸ் முதல் நியூயோர்க் வரை பரவியுள்ள "ஃபெர்ன்" பனிப்புயல் காரணமாக நாடு முழுவதும் இயல்பு வாழ்க்கை முடங்கியுள்ளது. சுமார் 23 கோடி மக்கள் இந்தப் பேரழிவின் பிடியில் சிக்கியுள்ளனர்.

பனிப்பொழிவு மற்றும் கடும் காற்றினால் சனிக்கிழமை முதல் திங்கட்கிழமை வரை சுமார் 14,500 விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான பயணிகள் விமான நிலையங்களில் முடங்கியுள்ளனர்.

கடும் பனிக்கட்டிகள் மின் கம்பிகள் மீது விழுந்ததால், டெக்சாஸ் மற்றும் லூசியானா உள்ளிட்ட மாநிலங்களில் சுமார் ஒரு இலட்சத்து அறுபது ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்கள் இருளில் மூழ்கியுள்ளன.

நிலைமையின் தீவிரத்தைக் கருத்தில் கொண்டு, ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெற்கு கரோலினா, வெர்ஜீனியா, ஜோர்ஜியா உள்ளிட்ட 12 மாநிலங்களுக்கு மத்திய அவசர கால நிதி உதவியை வழங்க அனுமதி அளித்துள்ளார். ஒட்டுமொத்தமாக 21 மாநிலங்களில் அவசர நிலை பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

பல பகுதிகளில் வெப்ப நிலை பூச்சியத்திற்குக் கீழே (மைனஸ் டிகிரி) சென்றுள்ளது. பனிப்புயலுடன் சேர்ந்து "உறைபனி மழை" பெய்வதால் வீதிகள் வழுக்கும் தன்மையுடன் காணப்படுகின்றன.

மீட்புப் பணிகளுக்காக 12 மாநிலங்களில் நூற்றுக் கணக்கான தேசிய பாது காப்புப் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைத்தொழில் அமைச்சர் நெடுந்தீவுக்கு விஜயம்



(யாழ்ப்பாணம்)

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி அண்மையில் நெடுந்தீவுக்கு விஜயம் மேற்கொண்டார்.

அவ்விஜயத்தின் போது, கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்டு வரும் ஆடைத் தொழிற்சாலையை அவர் நேரில் பார்வையிட்டதுடன், அங்கு பணியாற்றும் தொழிலாளர்களை சந்தித்து அவர்களின் அனு பவங்கள், தேவைகள் மற்றும் எதிர் கொள்ளும் சவால்கள் தொடர்பாக கலந்துரையடினார்.

மேலும், நெடுந்தீவில் செயற்பட்டு வரும் சிறு கைத்தொழில் முயற்சியாளர்கள், வியாபாரிகள் மற்றும் சுற்றுலாத் துறையினர் ஆகியோரையும் சந்தித்த அமைச்சர், அவர்களின் பிரச்சினைகள் மற்றும் எதிர்பார்ப்புகளை கேட்டறிந்தார்.

உள்ளூர் பொருளாதாரத்தை வலுப்படுத்த தேவையான நடவடிக்கைகள் குறித்து விரிவாக கருத்துப் பரிமாற்றம் மேற்கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, நெடுந்தீவு பிரதேச செயலகத்திற்கும் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, அங்கு நிலவும் வளக் குறைபாடுகள் மற்றும் நிர்வாகச் சவால்களை ஆராய்ந்ததுடன், பணியாளர்களுடனும் கலந்துரையாடி, மக்களுக்கு சிறந்த சேவைகளை வழங்குவதற்கான வழிமுறைகள் குறித்து கவனம் செலுத்தினார். (8-33)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1986- இந்து
நட்சத்திரம்: மகம்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: HNDA, Canada
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16478

பிறப்பு:1996- இந்து
நட்சத்திரம்:மகம்
7இல் சூரிசெவ்
கி-பா: 48
உயரம்:5'7"
தகைமை/தொழில்-BSC, Civil Engineer
எதிர்பார்ப்பு: Doctor, Engineer
தொ.இ: B/16479

பிறப்பு:1990- இந்து
நட்சத்திரம்:புனர்பூசம்
2இல் செவ்
கி-பா: 35 1/4
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: O/L,சாரதி
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16482

பிறப்பு: 1995- இந்து
நட்சத்திரம்:திருவாதிரை
12இல் செவ்
உயரம்:5'10"
தகைமை/தொழில்: BSC, Software Engineer
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: B/16485

பிறப்பு: 1991-இந்து
நட்சத்திரம்:பூராடம்
2இல்செவ் உயரம்:5'5"
தகைமை/தொழில்: HNDE, Work(pvt)
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்
தொ.இ: B/16486

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1986- இந்து
நட்சத்திரம்: பரணி
கி-பா: 47
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: Beautician
எதிர்பார்ப்பு:வெளிநாடு
தொ.இ: G/16487

பிறப்பு: 1994-இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BA, pvt
எதிர்பார்ப்பு:வெளிநாடு, அரச தொழில், விவாகரத்தானவர்
தொ.இ: G/14366

பிறப்பு: 1991-இந்து
நட்சத்திரம்- பூரட்டாதி
கி-பா: 16
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: MBBS, Doctor
எதிர்பார்ப்பு: Engineer, Doctor
தொ.இ: G/16444

பிறப்பு: 1991- இந்து
நட்சத்திரம்:மூலம்
கி-பா: 44 1/2
உயரம்: 5'
தகைமை/தொழில் -O/L
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/16434

பிறப்பு: 1990-இந்து
நட்சத்திரம்-பூராடம்
7இல் செவ்
கி-பா: 78
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSC,MSC, உதவிப் பிரதேச செயலாளர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/16410

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 528

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# இசை மருத்துவம்

மனது சரியில்லை என்றால் உடனே சில பேர் இசையைக்கேட்க ஆரம்பித்துவிடுவது வழக்கம்!

மனதை சரி செய்வதற்கு அது ஒரு நல்ல வைத்தியம் தான்! ஏன் என்றால் இன்றைக்கு மனநோயாளிகளுக்கு இசையை ஒரு வைத்தியமாக உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். மனநோய்க்கு எத்தனையோ விதமான சிகிச்சை முறைகள் உண்டு.

Psychotherapy என்று ஒன்று! இது மனோதத்துவ சிகிச்சை அடுத்தது Hyphotherapy ! இது மனோவசிய சிகிச்சை.

Recreation Therapy என்று ஒன்று. இது மனமகிழ் சிகிச்சை. இதைத் தவிர, அதிகபடியான உணர்ச்சிகளுக்கு சிகிச்சை உபயோகப்படுகிறது.

இதையெல்லாம் விட சிறந்த பலனைக் கொடுக்கக கூடிய ஒரு சிகிச்சை முறை Music Therapy இசை சிகிச்சை.

இசையினாலே நோய்கள் குணமாகும் என்கிறது பழங்காலத்திலிருந்தே இருந்துகொண்டு வர்ற ஒரு நம்பிக்கை. அது மட்டுமில்லை, இந்த இந்த ராகம் இன்னென்ன நோயைக் குணப்படுத்தும் என்று சொல்கிறார்கள். இதுக்கெல்லாம் தெளிவான விஞ்ஞான நிரூபணம் இல்லை என்றாலும் கூட இதெல்லாம் இப்பவும் ஆராய்ச்சிக்குரிய விடயங்கள்.

இதைப்பற்றியெல்லாம் மேற்கொண்டு நிறைய ஆராய்ச்சி செய்து நிறையக் கண்டுபிடிக்கலாம். அதையெல்லாம் சிறப்பாக உபயோகப் படுத்தலாம்!இந்தோளம் என்கின்ற ராகம், வாதநோய்க்கு நல்லதாம்! காரங்கா ராகம், பித்தம் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு!அசாவேரி ராகம் தலைவலியைக் குணப்படுத்த, நீலாம்பரி ராகம் இருக்கு பாருங்க.. அது உடல் இறுக்கத்தையும் மன இறுக்கத்தையும் போக்கி நம்மளைத் தூக்கத்திலே ஆழ்த்தக் கூடிய ராகம்!

பிலகரி, பூபாளம், நாட்டை இதெல்லாம் நமது தூக்கத்தைக் கலைத்து கண்விழிக்கச் செய்யக் கூடிய ராகங்கள். கவலை பசி இவை இரண்டையும் மறக்க வேண்டுமா?அதுக்கு கரகரப்பிரியா ராகம்! சோக உணர்வைத் தரக்கூடிய ராகங்கள்: முகாரி, சிவரஞ்சனி, ரேவதி. அதிர்ச்சி, பாதிப்பு, பரபரப்பு இதையெல்லாம் போக்கி மன அமைதியைத் தரக் கூடிய ராகங்கள் மத்யமாவதி, சகானா. இசை இருககிறதே.. இது கேட்கிறவர்களுக்கு மட்டும்தான் நல்லது செய்கிறது என்று இல்லை. அதைப் பாடுகிறவர்களுக்கும் பயிற்சி செய்கிறவர்களுக்கும் நன்மை செய்கிறது! பாடுகிறவர்களுக்கெல்லாம் ரத்த ஓட்டம் சீரடையும் முகத்திலே புதுக்களை உண்டாகும்! தோலின் சுருக்கங்கள் நீங்கும்! இளமையான தோற்றப் பொலிவு உண்டாகும்!அதனாலெ தான் சங்கீத வித்துவான்கள் பல பேரைப் பாருங்கள்... பார்க்கிறதுக்கு ஜோராக இருப்பார்கள். முகம் நன்றாக இருக்கும். பாடுகின்ற போது தான் ஒரு மாதிரியாக இருக்கும். அது பரவாயில்லே எல்லோருக்கும் அப்படி இருக்காது!இசையை “சங்கீத யோகம்” என்று சொல்லுவார்கள் ஏன என்றால் யோகப் பயிற்சிக்கும் இதுக்கும் சம்பந்தம் உண்டு.

ராக ஆலாபனை செய்யும் போது உள்ளே இழுக்கிற மூச்சு அங்கேயே கொஞ்ச நேரம் இருக்கும். அப்புறம்தான் வெளியிலே வரும்.. அது பிராணாயாமம் மாதிரி!

ஆரோகணம், அவரோகணம் பாடும் போதெல்லாம் மூச்சை இழுத்து படிப்படியா வெளியே விடவேண்டியிருக்கு இல்லையா? அதெல்லாம் யோகப் பயிற்சி மாதிரிதான்!இதைத் தவிர இசைக் கருவிகள் இருக்கிறது பாருங்கள். அதைப் பற்றியும் சிலது சொல்கிறார்கள். வீணையின் நாதம் ரத்தக் கொதிப்புக்கு நல்லதாம்! அதிகப்படியான ரத்தஅழுத்தத்தைக் குறைத்து மனசுக்கு அமைதியைக் கொடுக்குமாம்!

புல்லாங்குழல், நாதஸ்வரம் இதெல்லாம் கவலையாலே ஏற்படுகின்ற நோய்களைக் குணப்படுத்தி மனதிலே மகிழ்ச்சியைப் பெருக்குமாம்!மிருதங்கம் மாதிரியான தாள வாத்தியங்கள் எல்லாம் மனத்தளர்ச்சி, மனச்சிதைவு இதையெல்லாம் குணப்படுத்துமாம்! மறதியைப் போக்குமாம்! ஞாபகசக்தியைப் பெருக்குமாம்.

இப்படி என்னென்னமோ சொல்கிறார்கள்! அதனாலே இதைப் பற்றியெல்லாம் நிறைய ஆராய்ச்சிப் செய்தால் துல்லியமாக விடயங்களைத் தெரிந்து கொள்ளலாம்.இந்தத் தகவலை என்னுடைய நண்பன் ஒருத்தரிடம் சொல்லிக கொண்டிருந்தேன். அவனுக்கு சங்கீதம் என்றால் என்ன என்றே தெரியாது?அவன் ஒருநாள் அவசரமா என்னைத் தேடி வந்தான்! சார்.. வீணை இசை ரத்தக் கொதிப்பைக் குறைக்கும் என்று நீங்கள் சொல்க் கொண்டிருந்தேன்.ஆனால் எங்க பக்கத்து வீட்டுலே ஒரு வீணை வித்துவான் இருக்கிறார்.. நேற்று அவருக்கு ரத்தக் கொதிப்பு திடீர் என்று ஏறிப்போச்சு தெரியுமா? என்றான்.

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. நேற்று என்ன நடந்தது அவர்கள் வீட்டிலே?அவர் வீணை வாசித்தாரா என்று கேட்டேன்.

“இல்லை சார்..அவர் வீணையை எடுத்து நான் வாசிச்சேன்” என்றான் இவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## தயிர்சாதத்தின் ஆரோக்கிய நன்மைகள்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

தயிர் சாதம் செரிமானத்தை மேம்படுத்தி, உடல் சூட்டை தணித்து, குடல் ஆரோக்கியத்தை பேணும் ஒரு மிகச் சிறந்த உணவாகும். இது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து, மன அழுத்தத்தை குறைக்க உதவுகிறது.

உடலுக்கு தேவையான கல்சியம் மற்றும் புரதத்தை வழங்குகிறது. தயிரில் உள்ள புரோபயாடிக்குகள் (Probiotics) குடல் நுண்ணுயிர் சமனிலையை மீட்டெடுத்து செரிமானக் கோளாறுகளை நீக்கி மலச்சிக்கலை தடுக்கிறது. கோடை காலத்திற்கு உகந்த உணவான இது, உடலை உடனடியாக குளிர்வித்து புத்துணர்ச்சி அளிக்கிறது.

தயிர் சாதத்தில் கல்சியம், புரதம், ரிபோபிளேவின், உயிர்ச்சத்து $B_6$ மற்றும் $B_{12}$ போன்ற உடலுக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் நிறைந்துள்ளன.

தயிர் சாப்பிடுவது மன அழுத்தத்தை குறைத்து, மன அமைதியை மேம்படுத்த உதவுகிறது.


தயிரில் உள்ள ஊட்டச்சத்துக்கள் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது.

சூடான சாதத்தில் தயிர் கலந்து சாப்பிடுவது வயிற்று, சமிபாட்டு பிரச்சினைகளை ஏற்படுத்தலாம். எனவே, சாதம் ஆறிய பின்பு தயிர் சேர்த்து சாப்பிட வேண்டும்.

தயிர் சாதத்திற்கு குதிரைவாலி அரிசி பயன்படுத்துவது இன்னும் ஆரோக்கியமான உணவாக அமையும். தயிர்சாதத்தில் புரோட்டீன், கல்சியம் நிறைந்து இருப்பதால் என்புகள் மற்றும் பற்களை பலப்படுத்த உதவியாக இருக்கும். தயிர்சாதத்தில் ப்ரோபயாடிக் கூறுகள் நிறைந்துள்ளன.

இதில் உள்ள சத்துக்கள் குடலில் நல்ல பக்ரீரியாக்கள் ஆரோக்கியமாக வளர உதவுகிறது.

குறிப்பாக, குளிர்காலத்தில் செரிமான அமைப்பிற்கு தேவையான ஆதரவு தயிர் சாதத்தால் கிடைக்கின்றது.



தயிர் சாதத்தில் காணப்படும் உயிர் சத்து D மற்றும் ப்ரோபயாட்டிக் பண்புகள் உள்ளது.

இது நம் உடலிற்கு தேவையான நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவுகிறது.

இதன் மூலமாக பருவகால நோய்களை தடுத்து ஆரோக்கியமாக இருக்க வழியமைக்கின்றது.

தயிர்சாதமானது எமது உடலின் வளர்சிதை மாற்றத்தை அதிகரித்து உடல் எடையை நிர்வகிக்கும் புரதச் சத்துக்களைக் கொடுக்கின்றது.

மேலும் தயிர் சாத்ம் சாப்பிடுவதால் பசி குறைந்து அதிக உணவுகள் எடுத்துக் கொள்ளப்படுவதும் தவிர்க்கப் படுகிறது.

இதனால் உடல் எடையை குறைக்கவும் உதவுகிறது. தயிர்சாதம் சாப்பிட்டு வரும் போது தோல் பளபளப்பாக இருக்க உதவும். அத்துடன் தயிர்சாதத்தில் காணப்படும் பொட்டாசியம் இரத்த அழுத்தத்தை சீராக வைத்திருக்க உதவுகிறது. தயிர்சாதம் கெட்ட கொலஸ்ரோலை குறைத்து நல்ல கொழுப்பை ஊக்குவிக்கும். இரவு நேரம்தான் உடலுறுப்புகள் ஓய்வு எடுத்துக் கொள்ளும் என்பதால் எளிதில் செரிமானம் அடையும் உணவுகளையே இரவில் சாப்பிட வேண்டும்.

ஒரு மனிதனின் வளர்ச்சிதை மாற்றங்கள் இரவில் தான் நிகழ்கின்றன. தூக்கம் சரியாக இருந்தால் தான் வளர்சிதை மாற்றங்களும் சரியாக நடக்கும். அதனால் எளிதில் செரிமானமாகும் உணவுகளை இரவில் சாப்பிட்டால் உடல் உபாதைகள் ஏற்படாது. தயிர்சாதம் இரவில் எளிதில் செரிமானமாகாது.

அதனால் தயிர்சாதத்தை இரவு நேரத்தில் உட் கொள்ளக்கூடாது.

தயிரை சூடுபடுத்தியும் சாப்பிடக் கூடாது.

தயிர், மோர், நெய் ஆகியவற்றின் பிறப்பிடம் ஒன்று தான். ஆனால் குணாதிசயம் வெவ்வேறாக இருக்கிறது.

தயிர்சாதம் சாப்பிடும் போது நெல்லிக்காய் ஊறுகாய், சர்க்கரை போன்றவற்றை சேர்த்துக் கொண்டால் ஆரோக்கியம் மேலும் மேம்படும்.

உங்கள் உணவில் தயிர்சாதம் சேர்த்துக் கொள்வது உங்கள் தினசரி கல்சியம் உட்கொள்ளலுக்கு பங்களிக்கும் மற்றும் ஒட்டு மொத்த என்பு ஆரோக்கியத்தை ஆதரிக்கும். தயிர்சாதம் அரிசி, சிட்டிகை உப்பு, கறிவேப்பிலை மற்றும் தயிர் ஆகியவற்றின் ஊட்டச்சத்து நன்மைகளை ஒருங்கிணைக்கிறது. இது காபோவைதரேற்றுக்கள், புரதங்கள் மற்றும் கொழுப்புக்களின் சீரான கலவையை வழங்குகிறது.

இது நிலையான ஆற்றலை வழங்கும் திரப்திகரமான மற்றும் ஆரோக்கியமான உணவு. தயிர்சாதமானது மற்றவகைகளைக் காட்டிலும் கலோரி அளவு மிகக்குறைவு. அதனால் எடையை குறைக்க முயற்சி செய்பவர்கள் தங்களுடைய உணவு முறையில் தயிர் சாதத்தை கட்டாயமாக சேர்த்துக் கொள்ளலாம்.

இதிலுள்ள ப்ரோபயோடிக் மற்றும் ஆன்டி ஆக்சிடண்டுகள் மன அழுத்தத்தை குறைத்து, மனதை அமைதிப்படுத்துகிறது. ஒரு கப் தயிர் சாதம் சாப்பிட்டால் அது அன்றைய நாள் முழுக்கத் தேவைப்படும் சக்தியை கொடுக்கிறது.

தயிர்சாதத்தில் சோடியத்தின் அளவு மிகக்குறைவு என்பதால் அது உயர் அழுத்தத்தை முறைப்படுத்தி, சீராக வைத்திருக்க உதவுகிறது.

தயிர்சாதம் தினமும் சாப்பிடுவதால் மன ஆரோக்கியத்தை மேம்படுத்தி நினைவாற்றலை அதிகரிக்கும் என ஆய்வு முடிவுகளும் நிரூபிக்கின்றன. அதனால் அல்சைமர் போன்ற மறதி நோயால் அவதிப்படுபவர்கள் தினமும் தயிர்சாதம் சேர்த்துக் கொள்வது சிறந்தது.

தயிர்சாதத்தை நீரிழிவு நோயாளிகள் சாப்பிடும் போது, தயிரும் சாதமும் சேரும் போது, மெதுவாக சமிபாடடைந்து மெதுவாக உறிஞ்சப்படும். எனவே, சர்க்கரை ஏறும் அளவு குறைவாக இருக்கும்.

எனவே நீரிழிவு நோயாளிகளும் ஓரளவு தயிர்சாதம் சாப்பிடலாம். தயிரிலும் நீர்ச்சத்து இருப்பதால் சமிபாடு Control Speed இல் நடக்கும்.

# இராசிபலன்

26.01.2026
தை 12 , திங்கட்கிழமை
அட்டமி முன்னிரவு - 7.22 மணி வரை

அச்சுவினி முற்பகல் - 10.59 மணிவரை
சுபநேரம் -12.36 - 2.06 மணிவரை
இராகுகாலம் - 8.06-9.36 மணிவரை

சந்திராஷ்டமம்- அத்தம்

வளவன்




குடும்பத்தினர் உங்களின் முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பர், நல்லவர்களை சந்தித்து நலம் காண்பீர்கள், வேலைச் சுமை கூடும், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம்.




பிரியமான சிலரைச் சந்திக்கும் வாய்ப்புண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச்சொல்லுக்கு ஆளாகலாம்.




பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், வருமானம் எதிர்பார்த்தபடி கைகூடும் வாய்ப்புண்டு.




கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், எண்ணங்கள் எளிதில் கைகூடும், பயணத்தால் பணவரவு கிடைக்கும், செய்தொழிலில் முன்னேற்றம் பெற பாடுபடுவீர்கள்.




மறைமுகப் போட்டிகள் அகன்று வியாபார விருத்தி கிடைக்கும், சாமர்த்தியமாகப் பேசி சாதனை படைக்கும் நாள், மறதியால் விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீகள்.




தொழிலில் உயரதிகாரிகளை விமர்சிப்பதைத் தவிர்ப்பது நல்லது, மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், தேவையற்ற விரயங்கள் மேலோங்கும் நாள்.




நண்பர்கள் வழியில் நன்மைகள் நடைபெறலாம், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், பொது நாளில் அதிக அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.




பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், ஆரோக்கியம் சீராகும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.




மனதில் உற்சாகமும், மகிழ்ச்சியும் அதிகரிக்கும், புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ்கூடும், காலை நேரத்திலே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.




உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல அறிவுரை வழங்கலாம், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.




எதற்காகவும் பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது, தன்னம்பிக்கையும் தைரியமும் கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.




பொதுவாழ்வில் பாராட்டும், புகழும் கூடும், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்ற முண்டு.

தன்மானத்தோடு வாழ்வது தான் ஒருவனுக்குப் பெருமை தருவதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 964





இளைய ராணியின் சக்தியும் குன்றி விடும். மதுராந்தகத் தேவர் பின்னர் இராஜ்யம் என்ற பேச்சையே எடுக்க மாட்டார்.

சிற்றரசர்களின் சூழ்ச்சியையும் பாண்டிய நாட்டு ஆபத்துதவிகளின் சதியையும் ஒரேயடியாய் முறியடித்து வெற்றி காணலாம்".

"எல்லாம் சரிதான், தம்பி! ஆனால் கடம்பூருக்கு நான் திருமணம் செய்து கொள்வதற்காக வரவில்லை.

ஏதோ ஒரு பெரிய ஆபத்து நெருங்கிக் கொண்டிருக்கிறது. நான் சொல்கிறேன், கேள்! பழுவேட்டரையர் மதுராந்தகனோடு திரும்பி வரும் போது ஒரு பெரிய படையுடன் வரப்போகிறார்".

"ஐயா! அப்படியானால் நாமும் திருக்கோவலூர் அரசருக்குச் சொல்லி அனுப்பிப் படை திரட்டிக் கொண்டு வரச் செய்தால் என்ன? எதற்கும் முன் ஜாக்கிரதையுடன் இருப்பது நல்லதல்லவா?"

"நானும் அதைப் பற்றி யோசித்து வருகிறேன். ஒவ்வொரு சமயம் எனக்கு என்ன தோன்றுகிறது தெரியுமா? இந்தக் கடம்பூர் அரண்மனையைத் தரை மட்டமாக்கி, இங்கே சதியாலோசனை செய்தவர்கள் அத்தனை பேரையும் அரண்மனை வாசலில் கழுவிலேற்ற வேண்டுமென்று தோன்றுகிறது.

என் தந்தையை முன்னிட்டுத்தான் கோபத்தை அடக்கிக் கொள்கிறேன். அவரை மட்டும் நீ காஞ்சிக்கு அழைத்து வந்திருந்தால்?"

"இளவரசே! அவரிடம் தங்கள் ஓலையைச் சேர்ப்பிப்பதே பிரம்மப் பிரயத்தனமாகி விட்டதே!"

"ஆமாம் சக்கரவர்த்தி இந்தப் பழுவேட்டரையர்களிடம் நன்றாய் அகப்பட்டுக் கொண்டிருக்கிறார். என் பெற்றோர்களுக்கென்று காஞ்சிமா நகரில் நான் கட்டிய பொன்மாளிகையில் வௌவால்கள் சஞ்சரிக்கின்றன.

நான் உயிரோடிருக்கும் போது அவர்களை அம்மாளிகையில் வரவேற்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்குமோ, என்னமோ தெரியாது.

இந்தக் கடம்பூரைவிட்டு உயிரோடு போவேனோ என்று கூடச் சந்தேகமாயிருக்கிறது".

"இளவரசே! தாங்கள் இவ்விதம் பேசப் பேச, மலையமானைப் படைகளுடன் வரச் சொல்வது மிக்க அவசியம் என்று தோன்றுகிறது.."

"அந்த காரியத்துக்கு உன்னையே அனுப்பலாமா என்று பார்க்கிறேன்.."

"ஐயா! மன்னிக்க வேணும்! தங்களை விட்டு ஒரு கணமும் பிரியவே கூடாது என்று தங்கள் தமக்கையார் எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார்கள்.."

"அதை நீ இதுவரை நன்றாக நிறைவேற்றி வருகிறாய்."

"பார்த்திபேந்திர பல்லவர் இங்கே சும்மாத்தான் இருக்கிறார். பொழுது போகாமல் கஷ்டப்படுகிறார்"

"ஆமாம் பழுவூர் இளைய ராணியைப் பாராத ஒவ்வொரு கணமும் அவனுக்கு ஒவ்வொரு யுகமாக இருக்கிறது.


பார்த்திபேந்திரன் பெண்ணழகுக்கு இவ்வளவு அடிமையானவன் என்று நான் கனவிலும் கருதவில்லை. அவனைத் தான் மலையமானிடம் அனுப்ப வேண்டும்".

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## படுக்கையிலும் உண்டு; படகிலும் உண்டு



கப்பலில் முதன் முதலாகப் பயணம் செய்தார் ஒருவர். "பரந்து கிடக்கும் கடலில் எப்பொழுது வேண்டுமானாலும் கப்பல் மூழ்கி விடலாம்.

பயணம் வெற்றியாக அமைந்து ஊர் போய்ச் சேர்வோம் என்ற உறுதி யாருக்கும் இல்லை. கப்பலிலேயே எப்பொழுதும் பணி புரிகின்ற மாலுமிகளின் நிலை இதை விட மோசம்" என்று நினைத்தார் அவர்.

அங்கிருந்த மாலுமி ஒருவனை "உன் தந்தையார் என்ன பணி புரிந்தார்?" என்று கேட்டார்.

"என் தந்தையாரும் என்னைப் போல் கப்பலில் மாலுமியாகப் பணி புரிந்தார். ஒருநாள் அவர் பயணம் செய்த கப்பல் புயலில் சிக்கி மூழ்கியதால் அவர் இறந்து விட்டார்" என்றான்.

"சரி! உன் தந்தையாரின் தந்தையார் என்ன செய்தார்?" என்று கேட்டார் அவர்.

"அவரும் மாலுமியாகத்தான் பணிபுரிந்தார். அவரும் கப்பலோடு மூழ்கி இறந்து போய்விட்டார்" என்று பதில் சொன்னான் மாலுமி.

"என்ன? உன் தந்தையாரும் அவர் தந்தையாரும் கப்பலில் பயணம் செய்யும் போது இறந்து விட்டார்கள் என்கிறாய், நீயும் மாலுமியாக இருக்கிறாய். கடலில் மூழ்கி இறந்து விடுவோம் என்ற அச்சம் உனக்கு இல்லையா?" என்று கேட்டார்.

"உங்கள் தந்தையார் எப்படி இறந்தார்?" என்று கேட்டார் மாலுமி.

"படுக்கையில் படுத்திருக்கும் போது". "அவருடைய தந்தையார் எப்படி இறந் தார்?".

"அவரும் படுக்கையில் படுத்திருக்கும் போது தான் இறந்தார்".

"உங்கள் தந்தையாரும் அவர் தந்தையாரும் படுக்கையில் படுத்திருக்கும் போது தான் இறந்து இருக்கிறார்கள். நீங்கள் எப்படி அச்சமில்லாமல் படுக்கையில் படுத்து உறங்குகிறீர்கள்?" என்று கேட்டான் மாலுமி.

அப்பொழுதுதான் அவருக்கு உண்மை புரிந்தது. "உயிரை எப்பொழுதும் காப்பாற்றி வைக்க முடியாது. அது நம் உடலை விட்டு நீங்கியே தீரும். நமக்குரிய கடமையைச் செய்து கொண்டு அச்சமின்றி வாழ்வதே மேலான வாழ்க்கை" என்பதை அவர் உணர்ந்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரம் செலுத்த வேண்டிய சமயத்தில், அதை இனிமை மற்றும் மென்மையுடன் பயன்படுத்துங்கள். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## காலம் கடக்கிறதே தவிர காரியம் ஏதும் ஆகவில்லை

இனப் பிரச்சினைக்கான தீர்வு பற்றிய கதைகள் எதுவும் இப்போது பேசப்படுவதில்லை. பாராளுமன்றத்தில் தமிழ் உறுப்பினர்களுக்கு வேறு தொல்லைகள் வந்துவிட்டன.

குற்றம் களைவதற்காகப் பதிலளிப்பதிலேயே அவர்களின் பாராளுமன்ற உரை நேரங்கள் கடந்து விடுகின்றன.

ஒரு காலத்தில் நம் தமிழ்த் தலைவர்கள் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரைகள் தமிழ் மக்களின் அவலங்களையும் உரிமைகளையும் சுட்டி நின்றன.

ஆனால் இப்போது சொந்த விடயங்கள் பற்றியே நம் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் உரையாற்றுகின்றனர். என்ன செய்வது நம் தலைவிதி அதுவாயிற்று.

இதற்கு மேலாக தமிழ் அரசியல் கட்சிகளாவது தமிழ் மக்களின் உரிமைசார் விடயங்களில் கருசனை காட்டுமெனில், தமிழ்க் கட்சிகளுக்குள் கழுத்தறுப்புகள் உச்சம் பெற்றிருப்பதால் தமிழ்க் கட்சிகளும் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் முன்னகர்வுகள் எதனையும் மேற்கொள்ளப் போவதில்லை என்பதும் உறுதியாகிறது.

இந்நிலையில் யாழ்.மாவட்டத்தில் இருந்து தேசிய மக்கள் சக்தி சார்பாகத் தெரிவு செய்யப்பட்ட மூன்று தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏதேனும் நடவடிக்கை எடுப்பார்கள் என்றால், அவர்கள் இன்னமும் ஆளுந்தரப்பின் கவனத்துக்கு ஆளாகாதவர்கள் போல் தெரிகின்றனர்.

உண்மையில் யாழ்.மாவட்டத்தில் இருந்து தேசிய மக்கள் சக்தி ஊடாகப் பாராளுமன்றத்துக்கு சென்ற தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள், ஜனாதிபதி அநுர மீது தமிழ் மக்கள் கொண்ட நம்பிக்கை காரணமாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள்.

அதாவது, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மீது தமிழ் மக்கள் தமது நம்பிக்கையைத் தெரிவிக்கும் வகையிலும் கடந்த காலங்களில் தமிழ்த் தரப்பினர் எங்களை ஏமாற்றி விட்டார்கள் என்பதை வெளிப்படுத்துவதை நோக்காகவும் கொண்டு, தேசிய மக்கள் சக்தி சார்பில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிட்டவர்களில் மூன்று தமிழர்களைப் பாராளுமன்றுக்கு அனுப்பி வைத்தனர்.

எனவே தமிழ் மக்களின் இனப் பிரச்சினை தொடர்பில் அவர்களுக்கான தீர்வு என்ன? அந்தத் தீர்வு எப்போது வழங்கப்படும்? என்ற வினாக்களைப் பாராளுமன்றத்தில் எழுப்ப வேண்டிய கடமைப்பாடு யாழ்.மாவட்டத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஆளுந்தர்ப்பு சார்ந்த மூன்று தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் உண்டு.

இருந்தும் அவர்கள் பாராளுமன்றத்தில் ஆற்றுகின்ற உரைகளை உன்னிப்பாகக் கேட்கும்போது, அவர்கள் இன்னமும் ஆளுந்தரப்புடன் தங்களை ஒன்றிணைக்கவில்லையோ அல்லது அவர்களை ஆளுந்தரப்பு பொருட்படுத்தவில்லையோ என்று எண்ணுமளவிலேயே நிலைமையுள்ளது.

எனவே யாழ்.மாவட்டத்திலிருந்து பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்ட ஆளுந்தரப்பு எம்.பிக்கள் பாராளுமன்றில் துணிந்து பேச வேண்டும்.

நீங்கள் ஆற்றுகின்ற பேச்சு ஒரு கனதியை ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் நீங்கள் பாராளுமன்றம் சென்றதன் பயன் நம் தமிழ் மக்களுக்குக் கிடைப்பதாக இருக்கும்.

இதைவிடுத்து அச்சத்தோடும் ஏக்கத்தோடும் நீங்கள் பேசுவதைப் பார்க்கும்போது, உங்களின் அரசியல் எதிர்காலம் எப்படியாகுமோ என்று சிந்திக்கத் தோன்றுகிறது.

### கணக்காய்வாளர் நாயகம், சட்டமா அதிபர்

# விவகாரங்களில் அத்துமீறும் அரசு சர்வதேசத்தை நாடும் எதிர்க்கட்சி

(கொழும்பு)

கணக்காய்வாளர் நாயகம் மற்றும் சட்ட மா அதிபர் பதவிகளுக்கு அரசாங்கத்தினால் விடுக்கப்படும் சவால்களுக்கு எதிராக சர்வதேசத்தின் உதவியை நாடியுள்ளதாக எதிர்க்கட்சி அறிவித்துள்ளது.

கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு நிரந்தர அதிகாரியை நியமிக்க அரசு காலம் கடத்துகிறது. அத்துடன் சட்டமா அதிபருக்கெதிராக மறைமுக அரசியல் அழுத்தம் கொடுக்கப் படுகிறது என எதிர்க் கட்சி குறிப்பிட்டுள்ளது.

அதன்படி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்சில், சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, காமன்வெல்த், அமெரிக்க நாடுகளுக்கு இடையேயான மேம்பாட்டு வங்கி, சர்வதேச சட்ட வல்லுநர்கள் ஆணையம், பாராளுமன்றங்களுக்கு இடையேயான ஒன்றியம், ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டம், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் டிரான்ஸ்பரன்சி இன்டர் நேஷனல் ஆகிய அனைத்து சர்வதேச அமைப்புகளுக்கும் எதிர்க்கட்சி தனித்தனி கடிதங்களை அனுப்பியுள்ளது.

எதிர்க்கட்சி சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க கையொப்பமிட்ட பாராளுமன்ற கடிதத் தலைப்பின் கீழ் மின்னஞ்சல் மூலம் அவை அனுப்பப்பட்டுள்ளன.

இந்த விவகாரத்தை உடனடியாக விசாரித்து நாட்டில் ஜனநாயகம், சட்டத்தின் ஆட்சி மற்றும் வெளிப்படைத் தன்மையைப் பேண தலையிடுமாறு குறித்த கடிதங்களின் வாயிலாக எதிர்க்கட்சி கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

# வெட்டுக் காயங்களுடன் பெண்ணின் சடலம் மீட்பு

(மகாஓயா)

கழுத்துப் பகுதியில் வெட்டுக்காயங்களுடன் பெண் ஒருவரின் சடலம் மகாஓயா - பெரகல வனப்பகுதியில் உள்ள ஓடை ஒன்றிற்கு அருகிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

வராபிட்டிய பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய பெண்ணின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. அந்தப் பெண் கால்நடைகளை மேய்ச்சலுக்காக கடந்த வெள்ளிக்கிழமை (23) அன்று இந்த வனத்திற்கு கொண்டு சென்ற நிலையில்,

வீடு திரும்பாமையால் பிரதேச மக்களுடன் இணைந்து உறவினர்கள் மேற்கொண்ட தேடுதலின் போதே குறித்த பெண்ணின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மகாஓயா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ந-7)

# கொள்ளுப்பிட்டியில் துப்பாக்கிச் சூடு

## பொலிஸார் தீவிர விசாரணை

(கொள்ளுப்பிட்டி)

கொழும்பு கொள்ளுப்பிட்டி ஆர்.ஏ.டி. மெல் மாவத்தை பகுதிக்கு நேற்று அதிகாலை சுமார் 2.35 மணியளவில் உந்துருளியொன்றில் வந்த இருவர், அங்கிருந்த ஒரு கட்டடம் மற்றும் அதன் நுழைவாயிலை இலக்கு வைத்து சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

சுமார் 16 தடவைகள் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ள போதிலும், அதிர்ஷ்டவசமாக இந்தச் சம்பவத்தில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை.

சம்பவம் நடந்த இடத்திற்கு அருகில் சிதறிக் கிடந்த வெற்றுத் தோட்டாக்களின் அடிப்படையில், கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் [illegible] விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ரீ - 56 ரக துப்பாக்கியை பயன்படுத்தி குறித்த தாக்குதல் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்தப்பகுதியில் உள்ள சிசிரிவி கமராக்களின் காட்சிகளை ஆய்வு செய்தபோது, உந்துருளியின் பின்னால் அமர்ந்திருந்த நபர் ஒரே நேரத்தில் கட்டடம் மற்றும் நுழைவாயிலை நோக்கி சுடுவதைக் காணக்கூடியதாக இருப்பதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் என்ன என்பது இதுவரை கண்டறியப்படவில்லை.

தாக்குதல் நடத்திய நபர்களைக் கைது செய்ய கொள்ளுப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ந-7)

# மதங்களுக்கு எதிராக அரசு செயற்படுகின்றதாம்

## குற்றம் சாட்டுகிறார் நாமல் எம்.பி

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம் தனது அரசியல் இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்காக இந்த நாட்டின் கலாசாரம் மற்றும் மதங்களுக்கு எதிராகச் செயற்படத் தயாராகி வருவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர்;

அமைச்சர் கே.டி. லால்காந்தவின் அண்மைக்கால உரைகள் இந்த உண்மையை உறுதிப்படுத்தியுள்ளது.

கோட் அணிந்திருப்பவர்களைத் தாக்குவேன் என்றும் காவி உடை அணிந்திருப்பவர்களை (மகா சங்கத்தினர்) தாம் பொருட்படுத்தப் போவதில்லை என்றும் அமைச்சர் லால்காந்த பகிரங்கமாகக் கூறியுள்ளார்.

அமைச்சரின் இந்த கருத்துக்கள் அரசாங்கத்தில் இருப்பவர்கள் தங்களின் அரசியலுக்காக உள்ளூர் கலாசாரத்தையும் மத விழுமியங்களையும் சீரழிக்கத் துணிந்துவிட்டனர் என்பதையே காட்டுகிறது.

அரசாங்கத்தின் இத்தகைய போக்கானது நாட்டின் நீண்டகாலப் பாரம்பரியங்களுக்கு அச்சுறுத்தலாக அமையும் என்றார். (ந-7)

# ரஷ்யப் பெண் ஒருவர் கடலில் மூழ்கிப் பலி

(காலி)

காலி - பெந்தோட்டை கடற்பரப்பில் நீராடச் சென்ற வெளிநாட்டுப் பெண் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

ரஷ்யாவைச் சேர்ந்த 49 வயதுடைய பெண்ணே சம்பவத்தில் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த பெண் மேலும் சில வெளிநாட்டவர்களுடன் இணைந்து கடலில் நீராடிக் கொண்டிருந்த போதே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக பெந்தோட்டைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடாவடிக் கோட்டை

## அமெரிக்க உளவுத்துறை சிஐஏ வரலாறு 06

என்.சொக்கன்

மற்ற இரண்டு கட்சிகளும் இணைந்து தேர்தலைச் சந்தித்தன. இதனால், குடியரசுக் கட்சி நிச்சயமாகத் தோற்கடிக்கப்பட்டுவிடும் என்கிற நிலைமை.

அப்போதுதான், சிஐஏ இந்தத் தேர்தலில் தலையிடத் தீர்மானித்தது. இத்தாலிப் பொதுத் தேர்தலுக்கும் அமெரிக்காவுக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை. ஆனால், இந்தத் தேர்தலில் குடியரசுக் கட்சி தோற்றுவிட்டால், அது பெரிய ஆபத்தாகிவிடும் என்று முடிவு செய்தது அமெரிக்கா.

காரணம், குடியரசுக் கட்சியை எதிர்த்து நிற்கிற இரண்டு கட்சிகளுமே கம்யூனிஸக் கொள்கைகளை ஆதரிக்கின்றன. இவற்றுக்கு மறைமுகமாக சோவியத் யூனியன் உதவிக்கொண்டிருப்பதாக ஒரு செய்தி.

ஒருவேளை இந்தக் கட்சிகள் ஜெயித்துவிட்டால்? இத்தாலியில் கம்யூனிஸ ஆட்சி மலர்ந்துவிடும். அது அமெரிக்காவுக்குப் பொறுக்குமா? குட்டையைக் குழப்புவதற்காகத் தானும் களத்தில் குதிக்கத் தீர்மானித்தது.

ஆனால், தேர்தல் நடக்கப்போவது இத்தாலியில். ஓட்டுப்போடப்போவது இத்தாலியர்கள், இதனால் ஏதேனும் பிரச்சினை வந்தாலும்கூட, அது இத்தாலியின் உள்விவகாரம். அதில் அமெரிக்கா தலையிடுவது நாகரிகமாக இருக்காது.


அதனால்தான், தன்னுடைய பிரதிநிதியாக சிஐஏவை அனுப்பிவைத்தது அமெரிக்கா. திரை மறைவில் அவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம், ஏதேனும் விவகாரமாகிவிட்டால், அதற்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்லித் தப்பித்துக்கொள்ளலாம்.

எப்படியாவது குடியரசுக் கட்சியை ஜெயிக்கச் செய்யவேண்டும் என்பதுதான் சிஐஏவுக்குத் தரப்பட்டிருந்த ஒரே நோக்கம். அதற்காக என்னவெல்லாம் செய்யலாம் என்று பக்காவாக லிஸ்ட் போட்டுக்கொண்டு வேலைகளில் இறங்கினார்கள்.

முதல் வேலையாக, எந்தெந்த ஊரில் யாருக்கு ஆதரவு அதிகமாக இருக்கிறது என்று உளவு பார்க்கத் தொடங்கியது சிஐஏ. அப்போது தான், அநேகமாக எல்லா இடங்களிலும் குடியரசுக் கட்சி இரண்டாம் இடத்துக்குத் தள்ளப்பட்டிருப்பது தெரியவந்தது.

இதைத் தொடர்ந்து, ஏகப்பட்ட செலவில் பத்திரிகைகள், வானொலி போன்ற ஊடகங்களின் மூலம், எதிர்ப் பிரசாரங்கள் தொடங்கின. இதற்காக சிஐஏ வெளியிட்ட துண்டுப் பிரசுரங்கள், புத்தகங்கள், பேச்சுகள் அனைத்தும், கம்யூனிஸ ஆட்சியின் "பின் விளைவு" களைச் சுட்டிக்காட்டுவதாக அமைந்திருந்தன.

அதாகப்பட்டது இத்தாலியர்களே, நீங்கள் PSI அல்லது PCI கட்சிக்கு ஓட்டுப் போடுவதாக இருந்தால், கொஞ்சம் யோசியுங்கள். உலகம்



முழுவதும் அமைந்திருக்கிற கம்யூனிஸ்ட் ஆட்சிகள், தங்களுடைய மக்களை எப்படியெல்லாம் கொடுமைப்படுத்திக் கொண்டிருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியுமா? உங்களுடைய இத்தாலி, கம்யூனிஸத்தின் கோரப்பிடியில் சிக்கிக்கொள்வதை நீங்கள் அனுமதிக்கமாட்டீர்கள்தானே? எதுவானாலும், ஒருமுறை யோசித்துவிட்டுச் செயல்படுங்கள். உங்கள் எதிர்காலம் உங்கள் கையில். அவ்வளவுதான் விடயம்.

சிஐஏவின் இந்தப் பிரசாரம், உண்மையா? பொய்யா? என்பது முக்கியம் இல்லை. இதை அவர்கள் நூறு முறை, ஆயிரம் முறை, இலட்சம் முறை திரும்பத் திரும்பச் செய்தார்கள்.

இத்தாலியப் பொதுமக்கள் எந்தப் பக்கம் திரும்பினாலும், கம்யூனிஸம் என்பது உலக மக்களைக் கொன்று தீர்ப்பதற்காக வந்த அரக்கன் என்பதாக உரத்த குரலில் அலறிக் கொண்டிருந்தன ஊடகங்கள்.

மக்களுக்கு இந்தப் பிரசாரத்தையெல்லாம் யார் செய்கிறார்கள் என்பது தெரியவில்லை. ஆனால், இதையே மீண்டும் மீண்டும் கேட்கிறபோது, அவர்களுக்குக் கொஞ்சம் சந்தேகம் தட்டியது. கம்யூனிஸம் என்பது உண்மையிலேயே பெரிய விடயம் தானா? அல்லது பிரச்சினை உண்டாக்குகிற சாத்தானா? என்று சற்றே தயக்கத்துடன் யோசிக்கத் தொடங்கினார்கள்.

போதாதா? சட்டென்று அடுத்த கட்ட நடவடிக்கைகளில் இறங்கியது சிஐஏ.

இந்தமுறை, அவர்கள் இத்தாலிய கம்யூனிஸ்ட் தலைவர்களைக் குறிவைத்திருந்தார்கள். அவர்கள் மீது பலவிதமான குற்றச்சாட்டுகளைச் சுமத்தி, அதற்கான ஆதாரங்களையும் விளம்பரப்படுத்தினார்கள். இவற்றில் பெரும்பாலான "ஆதாரங்கள்", சிஐஏவால் கவனமாகத் தயார் செய்யப்பட்டவை என்பது வேறு விடயம்.

அதெல்லாம் இத்தாலிய மக்களுக்குத் தெரியவில்லை. கம்யூனிஸம் நம் தேசத்துக்குப் புதியது. அநாவசியமாக ஏன் ரிஸ்க் எடுக்க வேண்டும் என்று நினைத்துவிட்டார்கள். இத்தாலிய சோஷலிஸ்ட் /கம்யூனிஸ்ட் கட்சிகளுக்குப் போக வேண்டிய ஓட்டுகள் அனைத்தும், குடியரசுக் கட்சியின் பக்கம் திரும்பின.

இதனால், தேர்தல் அறிவிக்கப்பட்டபோது, கடைசி இடத்தில் தத்தளித்துக்கொண்டிருந்த குடியரசுக் கட்சி, அந்தத் தேர்தலில் மிகப் பெரிய வெற்றி பெற்றது. மொத்த வாக்குகளில் கிட்டத்தட்ட பாதி அவர்களுக்கு ஆதரவாக விழுந்திருந்தன. அமெரிக்கா விரும்பியபடி, இத்தாலியில் குடியரசுக் கட்சியின் ஆட்சி அமைந்தது.

அப்போது விழுந்த கம்யூனிஸ்ட் கட்சி, அதன்பிறகு இத்தாலியில் எப்போதும் பழைய பலத்துடன் எழமுடியவில்லை. சிஐஏவின் முதல் முக்கியமான வெளிநாட்டுப் "பணி", வெற்றிகரமாக முடிவடைந்தது.

ஒன்றரை வருடங்கள் கழித்து, இதே இத்தாலி நாடகத்தை இன்னொரு முறை நடத்திக்காட்டியது சிஐஏ. இந்தமுறை அவர்களிடம் சிக்கிய நாடு, ஃபிலிப்பைன்ஸ்.

இரண்டாம் உலகப் போருக் குப் பிறகு சுதந்திரம் பெற்ற ஃபிலிப்பைன்ஸில், அமெரிக்காவுக்கு ஆதரவான அரசாங்கம்தான் அமைந்திருந்தது. ஆகவே, அவர்களுக்குப் பொருளாதார ரீதியில் நிறைய உதவிகளைச் செய்துகொண்டிருந்தது அமெரிக்கா. பதிலுக்கு, அந்நாட்டைத் தங்களுடைய இராணுவ முகாம்போலப் பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

இங்கேயும், கம்யூனிஸ்ட்கள் அவர்களுடைய பாதையில் குறுக்கிட்டு நின்றார்கள். ஃபிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் இராணுவப் பிரிவான "ஹூக்ஸ்" (Hukbalahap), அமெரிக்காவுக்கு ஆதரவாக இயங்கும் அரசாங்கத்தை எதிர்த்துக் கிளர்ச்சிகளில் இறங்கியது.

இதனால், ஃபிலிப்பைன்ஸ் முழுவதும் கலாட்டா, கலவரங்கள் தினசரிச் செய்திகளாகிவிட்டன. எதிர் கோஷ்டியினருக்கு மக்களிடையே கொஞ்சம் கொஞ்சமாக ஆதரவு பெருகுவதைக் கவலையோடு பார்த்தது ஃபிலிப்பைன்ஸ் அரசாங்கம்.

கலவரங்களை ஒடுக்குவதற்கு, அமெரிக்காவின் உதவியைக் கேட்டது ஃபிலிப்பைன்ஸ் அரசு. இந்தப் பொறுப்பு, சிஐஏவிடம் ஒப்படைக்கப்பட்டது.

இத்தாலியில் அரங்கேற்றிய அதே திரைக்கதை. "கம்யூனிஸ்ட்கள் மக்களுக்கு எதிரானவர்கள், அவர்களைப்போய் நீங்கள் ஆதரிப்பீர்களா?" என்று திரும்பிய திசையெல்லாம் மைக் வைத்துக்கொண்டு அலறத் தொடங்கினார்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிவுல் ஓயா...

தெரிவித்து வவுனியா வடக்கில் எதிர்வரும் 30ஆம் திகதி பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றினை மேற்கொள்வதற்குத் திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பில் பொது அமைப்புகளுடனான கலந்துரையாடல் ஒன்றினை தமிழ்க் கட்சிகள் இன்று 26ஆம் திகதி தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் மேற்கொள்ளவுள்ளன.

இதற்காக வவுனியாவைச் சேர்ந்த பொது அமைப்புகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கிவுல் ஓயா திட்டம் தொடர்பில் பல்வேறு எதிர்ப்புகள் தமிழ் அரசியல் கட்சிகளிடமிருந்து கிளம்பியுள்ள நிலையில் அரசாங்கம் தொடர்ந்தும் இத்திட்டத்தை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)























## தமிழ்க் கட்சி...

குறித்த திட்டம் இன அல்லது மத அடிப்படையிலான நோக்கங்களுடன் முன்னெடுக்கப்படுவதாகக் கூறப்படுவது முற்றிலும் தவறானதும், அரசியல் உள்நோக்கம் கொண்டதுமாகும்.

கிவுல் ஓயா திட்டம் குறிப்பிட்ட ஒரு இனத்திற்கோ அல்லது சமூகத்திற்கோ எதிரானதாக அல்லாது தேசிய அபிவிருத்தி, விவசாய வளர்ச்சி மற்றும் நீர்வள முகாமைத்துவத்தை இலக்காகக் கொண்டு வடிவமைக்கப்பட்ட ஒரு அரசாங்கத் திட்டம்.

"இந்த ஆட்சியின்கீழ் இனவாதத்துக்கும் மதவாதத்துக்கும் எந்தவிதமான இடமும் இல்லை. அனைத்து மக்களையும் சமமாகக் கருதும் கொள்கையுடனேயே அரசாங்கம் செயற்படுகிறது.

தமிழ் மக்களின் நில உரிமைகளும் சமூக உரிமைகளும் முழுமையாகப் பாதுகாக்கப்படும். எந்த ஒரு சமூகமும் அநீதிக்குள்ளாக்கப்பட அனுமதிக்கப்படமாட்டாது. சட்டத்துக்கு முரணான நிலகையகப்படுத்தல்கள் எதுவும் இடம்பெறாது என்றும் திட்டம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் உரிய சட்ட நடைமுறைகளின் கீழேயே மேற்கொள்ளப்படும்.

கிவுல் ஓயா திட்டத்தின் மூலம் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விவசாய உற்பத்தி அதிகரிக்கப்படுவதோடு, ஆயிரக்கணக்கான விவசாயக் குடும்பங்களுக்கு நிலையான நீர்ப்பாசன வசதி கிடைக்கும். இந்தத் திட்டத்தை இன அரசியல் கண்ணோட்டத்தில் பார்க்காமல், நாட்டின் நீண்டகால அபிவிருத்தித் தேவையாகக் கருதி அணுக வேண்டும்.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் வடக்கில் அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. தமிழ் மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டன. அந்தக் காலகட்டங்களில் எல்லாம் அரசாங்கத்துடன் ஒட்டுண்ணியாக இருந்த தமிழ்க் கட்சிகள் இன்று தமிழ் மக்களுக்கு நன்மை நடக்கும் பொழுது பொங்கி எழுகின்றன. தமது அரசியல் இருப்புக்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட தேசிய மக்கள் சக்தியால் தான் ஆபத்து என்பதாலேயே அவர்கள் மக்கள் நலன்சார் திட்டங்களில் கூட அரசியல் சாயம் பூசி ஒரு இழிவான அரசியலை முன்னெடுத்து வருகின்றனர் என்றார். (ந-7)

## அரசாங்க...

தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த தொழிற்சங்க நடவடிக்கைகள் மீண்டும் தொடரவுள்ளன.

இது. குறித்து அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் மருத்துவர் வாசன் ரட்ணசிங்கம் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது,

இந்தப் பணிப்புறக்கணிப்பில் ஒரு பகுதியாக மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளுக்கு மருந்துகளை வெளியில் உள்ள மருந்தகங்களில் (External Pharmacies) வாங்குமாறு பரிந்துரைத்தல், தேவையான மருத்துவப் பரிசோதனைகளை வெளியில் உள்ள தனியார் ஆய்வகங்களில் மேற்கொள்ளுமாறு நோயாளிகளுக்கு அறிவுறுத்துதல் போன்ற செயற்பாடுகளிலிருந்து விலகுவதற்குத் தீர்மானித்துள்ளோம்.

அத்துடன் வைத்தியசாலைக்கு வெளியே [illegible] ஒழுங்கமைக்கப்படும் மருத்துவ முகாம்களுக்கு வைத்தியர்களை அனுப்புவதில்லை எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலைக்குள் புதுப்புது அலகுகளைத் திறப்பதற்கு நாம் ஆதரவு வழங்கப் போவதில்லை.

அரசாங்கத்திடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பில் சுகாதார அமைச்சர், பிரதி சுகாதார அமைச்சர் உடன் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனெனில் எமது கோரிக்கைகள் வைத்தியசாலைகளில் உள்ள குறைபாடுகளை மையமாகக் கொண்டவை.

வைத்தியசாலையில் மருந்துகள் பற்றாக்குறை, பரிசோதனைகள் செய்ய முடியாத நிலை என்பனவற்றை சுகாதார அமைச்சு நிவர்த்திக்க வேண்டும்.

நாங்கள் கடந்த காலத்தில் முன்னெடுத்திருந்த தொழிற்சங்க நடவடிக்கைகளின்போது சுகாதார அமைச்சர் எமக்கு எழுத்து மூலம் அளித்த வாக்குறுதிகளை இதுவரை நிறைவேற்றவில்லை.

மாறாக எமது தொழிற்சங்க நடவடிக்கையை மக்களுக்கு அசௌகரியமான விடயமாகக் காட்ட முனைகிறது.

மக்கள் மீது உண்மையான கருசனை இருக்கும் என்றால் சுகாதார அமைச்சு வைத்தியர்களின் கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு நிறைவேற்ற வேண்டும் என்றார். (ந-7)

## சிறை...

நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர், எதிர்வரும் நாட்களில் சிறை அதிகாரிகள் இடமாற்றப்படுவர். கொழும்பு, வெலிக்கடை, பூசா உள்ளிட்ட பல சிறைச்சாலைகளில் நீண்ட காலமாக நடந்த பல்வேறு முறைகேடுகள் குறித்து கவனம் செலுத்தி வந்த நிலையில் இத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

சில சிறைக் காவலர்கள், கைதிகள் மற்றும் பல்வேறு சந்தேக நபர்களுடன் நெருக்கமாக உறவைப் பேணிய நிலையில் சட்டவிரோத மோசடியில் ஈடுபட்டுள்ளனர் என்ற தகவல்களும் கிடைத்துள்ளன. அவை தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்படும்.

சிறைச்சாலை சோதனைகளுக்காக அவ்வப்போது விசேட அதிரடிப் படையின் உதவியைப் பெற சிறைச்சாலைத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது என்றார். (ந-7)


## பூநாறி மரத்தடி...

மடைந்துள்ளார்.

தலையில் படுகாயமடைந்த குறித்த இளைஞன் நோயாளர் காவு வண்டி மூலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ந-க-7)



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4885)

076 825 7716 (ஆகாஸ்)

**தவறவிடப்பட்டுள்ளது**

எனது கார் திறப்பும் ஒரு கோப்பும் (file) மணிக் கூட்டுக் கோபுரத்துக்கு அருகில் இருக்கிற பொலிஸ் நிலையத்துக்கு எதிரே உள்ள நடை பாதையில் தொலைந்து விட்டது. கண்டவர்கள் பின்வரும் இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

**074 191 0721** (1981)

**மாப்பிள்ளை தேவை**

01. இருபாலை, இந்து, 1997, ரோகிணி, IT degree ayurvedic doctor மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (55043)
02. சுன்னாகம், இந்து, 1988, பரணி, MSc(UK), UK citizen மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(54543)
03. கரவெட்டி, இந்து, 1988, சுவாதி, Phd in Bio Chemistry, Germany citizen மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54321)
04. சாவகச்சேரி, இந்து, 1994, அஸ்தம், BDS (University of Jaffna), Dental doctor மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54201)
05. இருபாலை, இந்து, 1998, உத்தராடம், HNDA in Accounting மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (49646)
06. அச்சுவேலி, இந்து, 1995, பூசம், B.Com Accountant, Australia citizen மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (43129)
07. அச்சுவேலி, இந்து, 1992, ரோகிணி, BSc(Hons) in biological science மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (41136)
08. கந்தரோடை, இந்து, 2000, திருவாதிரை, Software Engineering மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (35870)
09. இளவாலை, இந்து, 1987, திருவாதிரை, Dentist doctor, canada citizen மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (32087)
10. சுன்னாகம், இந்து, 1995, திருவாதிரை, BSc(Hons) Micro biology, translational data scientist மணப் பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (30662)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். எல்லா விதமான ஜாதியிலும், Unmarried, Divorce என்பன உண்டு. (C-4884)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728
077 992 1494

# சிறுமி டினோஜா விவகாரத்தில் பக்கச் சார்பற்ற விசாரணை

## சுகாதார அமைச்சு உறுதி – ரவிகரன் எம்.பி

(சிலாவத்தை)

முல்லைத்தீவு - சிலாவத்தைப் பகுதியைச் சேர்ந்த சிறுமி குகநேசன் டினோஜாவின் சர்ச்சைக்குரிய மரணம் தொடர்பில் பக்கச் சார்பற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு நீதி நிலைநாட்டப்படுமென சுகாதார அமைச்சர் தம்மிடம் உறுதியளித்துள்ளதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு குமுழமுனை பகுதியில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் போதே பாராளுமன்ற உறுப்பினர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் பாராளுமன்றக் குழுவிற்கும், சுகாதார அமைச்சருக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே சுகாதார அமைச்சர் இந்த உறுதியை வழங்கியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை சம்பவம் தொடர்பான வழக்கு எதிர்வரும் 29ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் படவுள்ளமையும் குறிப்பிடத் தக்கது. (ந-7)

## விடுவிக்கக்...

எல்லை தாண்டி மீன்பிடித்த வழக்கில் கைது செய்யப்பட்டு 18 மாத சிறை தண்டனை விதிக்கப்பட்டு இலங்கை சிறையில் உள்ள பாம்பன் மீனவர்கள் 10 பேரையும் விடுதலை செய்யக் கோரி மீனவர்களின் உறவினர்கள் பாம்பன் பேருந்து நிலையம் முன்பு திடீர் சாலை மறியலில் ஈடுபட்டனர.

பாம்பன் தெற்குவாடி மீன்பிடித் துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்க சென்று கடந்த ஆகஸ்ட் மாதம் 5ஆம் திகதி எல்லை தாண்டி மீன்பிடித்த வழக்கில் கைது செய்யப்பட்ட 10 மீனவர்களுக்கு இந்திய தொகையில் ரூபாய் ஒரு கோடியே 40 லட்சம் அபராத தொகையும், கட்ட தவறும் பட்சத்தில் 18 மாத சிறைத் தண்டனை விதித்து இலங்கை நீதிமன்றம் உத்தரவிட்டதன் அடிப்படையில் மீனவர்கள் பத்துப் பேரும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த நான்கு மாதங்களை கடந்து சிறையில் இருப்பதால் மீனவர்களுக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளதால் மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய வலியுறுத்தியே மீனவர்களின் குடும்பத்தினர் பாம்பன் பேருந்து நிலையம் முன்பாக மதுரை தனுஷ்கோடி தேசிய நெடுஞ்சாலையில் அமர்ந்து சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பாம்பன் மீன்வளத்துறை உதவி இயக்குனர் கொழும்பில் உள்ள இலங்கை மேல் நீதிமன்றத்தில் மீனவர்களை விடுதலை செய்வது தொடர்பாக இந்திய அரசு சார்பில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டு விரைவில் தீர்ப்பு அளிக்கப்படும் என உறுதியளித்தமையை தொடர்ந்து சாலை மறியலில் ஈடுபட்ட மீனவர்களின் குடும்பத்தினர் அங்கிருந்து கலைந்து சென்றனர். (ந-7)

**பணிப்பெண் தேவை**

புலோலியில் உள்ள வீட்டில் வீட்டு வேலை செய்து பிள்ளைகளை பராமரிக்க பணிப்பெண் தேவை.
வயது : 40 - 50
பணி நேரம் : காலை 7.00 மாலை 5.00
077 459 7938
075 712 7528
(1982)

**வைத்தியம்**

கை விறைப்பு |கால் விறைப்பு |கை எரிவு |கால் எரிவு
குழந்தை இன்மை |நாட்பட்ட தலைவலி |மூலம்|கழுத்து வலி
கால் பாத விறைப்பு| முள்ளந்தண்டு வலி |முழங்கால், குதி வலி | Sciatica | Rheumatic Arthritis
நாட்பட்ட சளி | இருதயவலி | வாதம்| வயிற்றுப்புண் | Gastrtis | அல்சர் மிகச்சிறந்த மூலிகை, நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள் | சிக்கின் குனியாவால் ஏற்படும் மூட்டு, தசை, பாத வலிகள்

நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669
(6656)

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் - அரியாலை ஆனந்தம் வடலி வீதி 3 ஆம் ஒழுங்கை முகப்புடன் 3 பரப்பு 1 குளி காணி விற்பனைக்குண்டு.

- 1 ½ பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- நல்ல சூழல், நன்னீரூற்று
- யாழ்ப்பாண பஸ் நிலையம் 4Km
- A9 வீதியிலிருந்து 400m தூரம்
- வீடு, கடை அமைப்பதற்கு உகந்த இடம்.

076 860 2770
076 987 8617
(6658)

**காணி விற்பனைக்கு**

A9 வீதி நாவற்குழி சந்தியில் (புகையிரத நிலையம் முன்பாக) 2 ½ பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு. பரப்பு 55 இலட்சம்

075 847 3634
(விலை பேசித் தீர்மானிக்கலாம்)
(1983)

**சாரதி தேவை**

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை பகுதியில் இயங்கும் விற்பனை நிறுவனத்திற்கு
கனரக வாகன ஓட்டுநர் உரிமம் உடைய சாரதி ஒருவர் உடனடியாக தேவை.

- அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை
- பொறுப்புடன் பணியாற்றக் கூடியவர்
- சம்பளம்: நேர்முகத் தேர்வின் பின்னர் தீர்மானிக்கப்படும்

தொடர்பு : 077 633 1538
(6651)

**வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை**

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**
# 01 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி. யாழ்ப்பாணம்.
021 222 6113, 076 443 1576

**அருள்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்**
# 10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536, 077 657 9349
(C-4881)

- அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மையுடன்.
- 25 வருடங்களாக மக்கள் நம்பிக்கையை வென்ற நிறுவனம்.
- அனுப்பப்படும் பொதிகளுக்கு காப்புறுதி செய்ய வேண்டியதில்லை. முழுப் பெறுமதியையும் எமது நிறுவனம் பொறுப்பேற்கும்.
- உங்கள் வீடுகளுக்கு வந்து ஏற்றுக் கொள்ளப்படும் சேவைக்கு மேலதிக கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை.

கிளைகள்
# 01 தபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரி. # 01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி. CTB பஸ் டிப்போ எதிரில் பருத்தித்துறை. கொமர்ஷல் வங்கி அருகில் கிளிநொச்சி.

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.01.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org